விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 325 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 23 புதன்கிழமை (09.11.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை

### கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதுமுறிப்பு குளத்தின் நீர்ப்பாசன வாய்க் காலில் வெட்டுக் காயங்களுடன் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப் பட்டுள்ளது.

நேற்றுக் காலை வீதியால் சென்றவர்கள் சடலம் வாய்க் காலில் இருப்பதனை அவதா னித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

கிளிநொச்சி கோணாவில் ராஜன் குடியிருப்பை சேர்ந்த ப.சத்தியராஜ் வயது 36 என்ற இரண்டு பிள்ளைகளின் தந் தையே கொலை செய்யப்பட் டுள்ளதாக பொலிஸா ரின் முதல் கட்ட விசா

15

## இலங்கையை ஒருபோதும் தனிமையில் விடமாட்டோம்

### இலங்கைக்கான சீனத் தூதுவர்

(கொழும்பு)

நாட்டின் கடன் மறுசீரமைப் புக்கு தமது அரசாங்கம் பூரண ஆதரவை வழங்கும் என இலங் கைக்கான சீனத் தூதுவர் Qi Zhenhong தெரிவித்துள்ளார்.

நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவை சந் தித்த சீனத் தூதுவர் இதனைத் தெரிவித்ததாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையி லான நீண்டகால உறவுகளை வலுப் படுத்தி இலங்கைக்கு தொடர்ந்தும் ஆதரவளிப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க, இலங்கையை ஒரு போதும் தனிமையில் விட மாட்டோம் என சுட்டிக்காட்டியுள்ள அவர், நெருக்கடி நிலையிலி ருந்து இலங்கையை மீட்பதற்கு தொடர்ச்சியான ஆதரவை வழங் குவதாக நிதி இரா ஜாங்க அமைச்சருடன்

15

## வடக்கு மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண அர்ப்பணிப்புடன் செயற்படுங்கள்

### நீதியமைச்சர் விஜயதாஸ

(கொழும்பு)

வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண அனை வரும் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் செயற்படுவது அவசியமாகும் என நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜய தாஸ ராஜபக்ஷ பாராளுமன்றில் வலியுறுத்தினார்.



சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலை மையில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற கூட் டத்தொடரின் போது விசே ட உரையாற்றுகையில் மேற் கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

கடந்த ஒக்டோபர் மாதம் 31 மற்றும் 3 நவம்பர் முதலாம் திகதி களில் வடக்கு மக்களின் அடிப்படை பிரச்சினைக்கு

15

## வடமராட்சியில் போதைப் பொருளுடன் நான்கு பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நெல்லியடி பொலிஸ் பிரிவில் ஹெரோ யின் போதைப் பொருளு டன் வடமராட்சி பகுதியில் 4 பேர் நேற்று கைது செய் யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து 126 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரி வித்தனர்.

நெல்லியடி

15

## பச்சிளம் குழந்தையை துன்புறுத்திய தந்தை

### உடனடியாக கைது செய்யுமாறு ஊர்காவற்றுறை மன்று உத்தரவு

(யாழ்ப்பாணம்)

மூன்று வயது பச்சிளம் குழந்தை கொடூரமாக தாக்கி துன்புறுத்தி காணொலி வெளியிட்ட தந்தையை உடனடியாக கைது செய்யுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

15

## 306 அகதிகளை நாட்டிற்கு அழைத்துவர நடவடிக்கை

16 ஆம் பக்கம் பார்க்க

## பண்டிகைக் காலத்தை முன்னிட்டு பொருட்களை நியாயமான விலையில் விற்க அரசாங்கம் முயற்சி

### வர்த்தக அமைச்சர்



(கொழும்பு)

எதிர்வரும் மூன்று மாதங் களுக்குள் அத்தியாவசியப் பொருட்களின் விலையை அதிகரிக்காமல் நியாயமான விலையில் வழங்குவதற்கு அரசாங்கத்தி னால் முடியும் என வர்த்தக அமைச்சர் நளின்

15

## மாணவர்களுக்கு இடையே மோதல் 13 வயது சிறுவன் உயிரிழப்பு

15 ஆம் பக்கம் பார்க்க

## போதைப் பாவனைக்கு அடிமையான மகனை

### பொலிஸில் ஒப்படைத்த தாய்

(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தாயார் ஒருவர் தனது மகன் போதைப் பொருள் பாவ னைக்கு அடிமையான நிலை யில் அவருக்கு புனர்வாழ்வழி த்து மீள தம்மிடம் ஒப்படைக்கு மாறு வலியுறுத்தி நேற்று முன் தினம் தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்கவிடம் தனது

15

## 80 கிலோ கஞ்சா அரியாலையில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை - பூம்புகார் பகுதியில் மூன்று மூடைகளாக்கப்பட்ட

15

## யாழ். பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்திற்கு புதிய பீடாதிபதி தெரிவு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து கற் கைகள் பீடத்தின் புதிய பீடாதிபதியாக சமஸ்கிருதத் துறை தலைவர் பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன் ஏகம னதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 06 ஆம் திகதி முதல் மூன்று

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு

# எரிபொருள், உரம் என்பவற்றை உரிய காலப்பகுதிக்குள் வழங்குங்கள்

## அரச அதிபருக்கு சிறீதரன் கடிதம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் 13 கமநல சேவை நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளில் மேட்டுநிலப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளின் தேவை கருதி உரிய காலப்பகுதியில் அவர்களுக்கான மண்ணெண்ணெயையும் பசளைகளையும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரி, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

கடந்த 2022.10.23, 29, 30ஆம் திகதிகளில், மயிலிட்டி, வடமராட்சி, அத்தாய் மற்றும் தீவகப் பகுதி விவசாயிகளை பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தனித் தனியே சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

அக்கலந்துரையாடல்களின்போது மேட்டுநிலப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளால் அவருக்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை மேற்கோள் காட்டியே குறித்த கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (4-7)

# யாழ்.ப.நோ.கூ.ச தலைவருக்கு எதிரான வாக்கெடுப்பு தோல்வி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ச.லோகசிவத்திற்கு எதிராக கொண்டு வந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயக முறையில் சங்கத்தை நடத்தவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்து மேற்படி நம்பிக்கையில்லாப் பிரேரணை கூட்டுறவுத் திணைக்கள பிரதிநிதி முன் வாக்கெடுப்பிற்கு எடுக்கப் பட்டபோது, நம்பிக்கையில்லாப் பிரேரணை தோற்கடிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (4-7)

# கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் தமிழ்ப்பாட ஆசிரியர் திருமதி **சந்திரகலா சத்தியநேசன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**அமரர் கந்தையா நாகராசா**

அவர்கள் 06.11.2022 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்**
**நலன்புரிச் சங்கம்,**
**யா/இணுவில் மத்திய கல்லூரி**

(13394)

**நீர்வேலியில் அமரர் முருகையாவிற்கு**

# அஞ்சலிக் கூட்டம்



கடந்த திங்கட்கிழமை காலமாகிய நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் பொருளாளர்

**அமரர்**

## ச.க.முருகையா

**(ஓய்வுபெற்ற கிராமிய வங்கி முகாமையாளர்)**

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை மற்றும் அஞ்சலிக் கூட்ட நிகழ்வு 09.11.2022 புதன்கிழமை காலை 10 மணிக்கு நீர்வேலி வடக்கில் உள்ள அவரது பூர்வீக இல்லத்தில் (ஞான வைரவர் வீதி 5ஆம் ஒழுங்கை நீர்வேலி வடக்கு) நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து அமரரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்பாக வேண்டுகின்றோம்.

**அரசகேசரிப் பிள்ளையார் கோவில்**
**அன்பர்கள், நீர்வேலி.**

(C-5235)

# மரண அறிவித்தல்

திருமதி

## ஜெகதாம்பிகையம்மா ஆறுமுகசாமி



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெகதாம்பிகையம்மா நேற்று (08.11.2022) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - அன்னலட்சுமியின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - ஞானாமிர்தம் தம்பதியரின் மருமகளும் ஆறுமுகசாமியின் (JP) அன்பு மனைவியும் நந்தினி (DO - பிரதேச செயலகம் - நல்லூர்), கஜேந்திரன் (CTB கோண்டாவில்), தனேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற யோகநாதன், மல்லிகாதேவி, சுலோசனா ஆகியோரின் சகோதரியும் சுஜீவன் (AMC யாழ்ப்பாணம்), கலாநிதி, சுஜாதா ஆகியோரின் மாமியாரும் சுகிஷன், ரதுஷியன், ஜனுஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.11.2022) புதன்கிழமை 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**46/2, கருவப்புலம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 729 9272,**
**077 656 7704**

(C-5237)

# சாவு அறிவித்தல்

## திருமதி வள்ளியம்மா இராசரத்தினம்



இமையாணன் மேற்கு, நாவலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மா இராசரத்தினம் அவர்கள் 07.11.2022 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - அம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லன் - நாகி தம்பதிகளின் அன்பு மருமகளும் இராசரத்தினத்தின் அன்பு மனைவியும் பாஸ்கரன் (சுவிஸ்), பத்மா (பிரான்ஸ்), சங்கர் (சுவிஸ்), ராஜீ (சுவிஸ்), பிரியா, சுஜீகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் லேகா, நக்கீரன், சுபி, ரவிச்சந்திரன், ஜெயரூபன், தர்சினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான மணிமாலை (பவளம்), கனகரத்தினம் (வெள்ளையன்) மற்றும் ரஞ்சிதமலர் (ரதி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மந்திரி (காசிப்பிள்ளை), சண்முகரத்தினம் (சின்னக்கிளி), கலாமணி (சுசீலா) மற்றும் நாகரத்தினம், செல்வரத்தினம், அருளம்மா, செல்லத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனியும் இராஜேஸ்வரி, அருந்தவம், ஜெயமலர், குணமதி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.11.2022) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 475 5777,**
**077 428 1262**

(C-5236)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதே!

# புலோலி கமநலசேவை நிலையம் முன்பாக விவசாயிகள் கவனயீர்ப்புப் போராட்டம்

(கரணவாய்)

**விவசாயிகளின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யுமாறு கோரி புலோலி கமநல சேவைகள் நிலையம் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**





விவசாயிகளுக்குத் தேவையான மண்ணெண்ணெய், செயற்கை உரம், கிருமிநாசினி மற்றும் உள்ளீட்டு பொருட்களை வழங்குமாறு கோரி நேற்று வடகிழக்கு புனர்வாழ்வு அமைப்பும் விவசாயிகளும் இணைந்து குறித்த போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மறுக்காதே மறுக்காதே மண்ணெண்ணையை மறுக்காதே, வழங்கு வழங்கு உரத்தினை வழங்கு, அடிக்காதே அடிக்காதே ஏழை விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதே ஆகிய பதாகைகளை தாங்கியவாறு பிரதான வீதி ஊடாக பருத்தித்துறை பிரதேச செயலகத்தை சென்றடைந்து அங்கு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாய்ப்பிள்ளை சிறியிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர். (நி-6-33-60-104)

# ரோட்டரிக் கழக ஆளுநர் யாழ்.விஜயம்



(சாவகச்சேரி)

இலங்கை மற்றும் மாலைதீவிற்கான ரோட்டரிக் கழக ஆளுநர் ரோட்டரியன் சொய்சா வடக்கு மாகாணத்திற்கு மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டிருந்தார்.

அந்தவகையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்டத்தில் உள்ள சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம், நல்லூர் ரோட்டரிக் கழகம் மற்றும் யாழ்ப்பாணம் ரோட்டரிக் கழக பிரதிநிதிகளை சந்தித்திருந்தார்.

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத் தலைவர் தேவகுமார் தலைமையில் சுன்னாகம் கஜா விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற சந்திப்பு நிகழ்வில் ரோட்டரிக் கழகத்தின் மாவட்ட ஆளுநர், பொதுச் செயலாளர், உதவி மாவட்ட ஆளுநர் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இலங்கைக்கான ரோட்டரிக் கழக ஆளுநர் வடக்கு மாகாணத்திற்கு 3 நாள் விஜயம் மேற்கொண்டு கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்ட ரோட்டரிக் கழகங்களை சார்ந்த பிரதிநிதிகளை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-30)

# திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி நூற்றாண்டு விழா மலர் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி பரமேஸ்வராக்கல்லூரியின் நூற்றாண்டு விழா சிறப்பு மலர் வெளியீடு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பரமேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை ஏற்பாட்டில் பேராசிரியர் திருமதி. சுபதினி ரமேஸ் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகவும் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

பரமேஸ்வரா கல்லூரி நூற்றாண்டு விழா சிறப்பு மலரை செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் வெளியிட்டு வைக்கவுள்ளார். யாழ்.பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத் துறைத் தலைவர் கலாநிதி.ச.முகுந்தன் மற்றும் சைவ சித்தாந்தத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் த.செல்வமனோகரன் ஆகியோர் நூல் மதிப்பீட்டுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

குறித்த நிகழ்வில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மற்றும் சேர்.பொன். இராமநாதன் கட்புல ஆற்றுகைக் கலைகள் பீட மாணவிகளின் விசேட நடன நிகழ்வுகளும் அரங்கேற்றப்படவுள்ளன. (நி-6)

# யா/நடேஸ்வரக் கல்லூரியின் விஞ்ஞான ஆய்வுகூட திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை யா/நடேஸ்வரக் கல்லூரியின் ஐக்கிய இராச்சிய பழைய மாணவர் சங்கத்தின் வெள்ளி விழா ஞாபகார்த்தமாக நிர்மாணிக்கப்பட்ட விஞ்ஞான ஆய்வு கூட திறப்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10.04 மணியளவில் குறித்த பாடசாலையின் அதிபர் கு. விமலன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் விருந்தினராக வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர் பொ. இரவிச்சந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)

## விசேட தேவையுடைய

# விண்ணப்பதாரிகளுக்கு சலுகைகள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த(உ.தர)ப் பரீட்சை-2022 மற்றும் பாடசாலைக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்காக நடத்தப்படும் பரீட்சை-2022 ஆகிய பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ள விசேட தேவைகளுடைய விண்ணப்ப தாரிகள் பரீட்சையின் போது முகங்கொடுக்கும் பாதகமான நிலைமைகளை நிவர்த்தி செய்வதற்கான சிபாரிசுகளை முன் வைப்பதற்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ள விசேட குழு நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் நேர்முகப் பரீட்சையை நடத்தவுள்ளது.

அன்றைய தினம் இவ் வேலைத் திட்டத்தை சிறப்பாக மேற்கொள்வதற்காக தங்களது வலயக் கல்வி அலுவலகத்தில் விசேட கல்விப்பாடத்திற்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பரீட்சை ஆணையாளர் எம். ஜீவராணி புனிதா அறிவித்துள்ளார். (4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2024 இருபது-20 உலகக் கிண்ண சுற்றுக்கு நேரடியாக 12 அணிகள் தகுதி




8 ஆவது இருபது-20 ஓவர் உலக கோப்பை கிரிக்கெட் போட்டி அவுஸ்திரேலியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் சூப்பர் 12 சுற்றுக்கு வந்துள்ள 12 அணிகள் 2 பிரிவாக பிரிக்கப்பட்டு மோதின.

இதில் குரூப் 1 இல் இருந்து நியூஸிலாந்து மற்றும் இங்கிலாந்து அணிகளும் குரூப் 2 இல் இருந்து பாகிஸ்தான் மற்றும் இந்தியா அணிகளும் அரையிறுதி சுற்றுக்கு முன்னேறி உள்ளது. அதிர்ச்சி அளிக்கும் வகையில் இந்த உலகக் கோப்பையில் ஏராளமான அதிர்ச்சி தோல்விகள் அரங்கேறின.

அதில் தென் ஆபிரிக்க அணி தனது கடைசி ஆட்டத்தில் நெதர்லாந்தை வீழ்த்தினால் அரையிறுதிக்கு முன்னேறும் என்ற நிலையில் அதிர்ச்சி தோல்வி அடைந்து லீக் சுற்றுடன் வெளியேறியது. இந்நிலையில் அடுத்த இருபது-20 உலகக்கோப்பை 2024 ஆம் ஆண்டு அமெரிக்கா மற்றும் மேற்கிந்திய தீவுகளில் நடக்க உள்ளது. இதில் மொத்தம் 20 அணிகள் பங்கேற்கின்றன. 55 போட்டிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அந்த உலகக்கோப்பை தொடருக்கு நேரடியாக இது வரை 12 அணிகள் முன்னேறி உள்ளன. அந்த அணிகளின் விபரம், போட்டியை நடத்தும் அமெரிக்கா மற்றும் மேற்கிந்தியதீவுகள் அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன.

அத்துடன் இந்த உலகக் கோப்பையில் சூப்பர் 12 சுற்றில் இரு குரூப்பிலும் முதல் 4 இடங்களை பிடித்த அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன.

அதன்படி நியூஸிலாந்து, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், தென் ஆபிரிக்கா, நெதர்லாந்து அணிகள் நேரடியாக தகுதி பெற்றுள்ளன. மேலும் ஐ.சி.சி தரவரிசை அடிப்படையில் வங்களாதேசம், ஆப்கானிஸ்தான் அணிகள் இரண்டும் நேரடியாக தகுதி பெற்றுள்ளன.

இதையடுத்து ஆபிரிக்க தகுதி சுற்றில் 2 அணிகள் அமெரிக்க தகுதி சுற்றில் 1 அணி, ஆசிய தகுதி சுற்றில் 2 அணிகள், கிழக்கு ஆசிய-பசுபிக் தகுதி சுற்றில் 1 அணி, ஐரோப்பிய தகுதி சுற்றில் 2 அணிகள் என மொத்தம் 8 அணிகளும் இதில் பங்கேற்க உள்ளன. (6)



பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் பொன் விழா(1972-2022) உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி நேற்று முன்தினம் தலைவர் மா. நவநீதமணி தலைமையில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது. குறித்த போட்டியில் அல்வாய் நக்கீரன் விளையாட்டு கழகமும் தொண்டமனாறு கலைவாணி விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் 2:0 என்ற பேறுக் கணக்கில் நக்கீரன் அணி வெற்றி பெற்றது.




உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தினரின் ஏற்பாட்டில் உருத்திரபுரம் அன்னையின் கரங்கள் அமைப்பின் அனுசரணையில் அண்மையில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு கிண்ணம் வழங்கப்பட்டது. (படம்:தேவானந்தன்)




**தனலட்சுமி**

சோகம் மட்டும் வாழ்க்கை கிடையாது..
சந்தோஷமாகவே எந்நாளும் வாழ்ந்திடவும் முடியாது..
சிமிட்டும் நம் இமைகள் ஒரு நொடி இருட்டினால் தான் நம்மால் பல நொடி வெளிச்சத்தில் வாழ முடியும்..!

**விக்கிரம்**

முயற்சிக்கு முன்னால் கேலிகள், கிண்டல்கள், துரோகங்கள், சோகங்கள், காயங்கள், சோதனைகள், தோல்விகள் யாவும் தோற்று ஒரு நாள் மாய்ந்து மடியும்..!

**நிவாஸினி**

வாழ்க்கையில் சேமிப்பை ஒரு போதும் அலட்சியம் செய்யாதீர்கள் சேமிப்பை அலட்சியம் செய்பவர்கள் தன் வாழ் நாளில் ஒரு போதும் செழிப்பை அடைய முடியாது.

**அசிம்**

நீ வெற்றியை தேடி அலையும் போது வீண் முயற்சி என்று சொல்லும் அவர்கள் தான் நீ வெற்றி அடைந்தவுடன் விடா முயற்சி என்று சொல்லி வாழ்த்துவார்கள்.

**ஜனனி**

சில நேரங்களில் நாம் எடுக்கும் பிழையான முடிவுகள் நம்மை சரியான பாதையில் பயணிக்கக் கற்றுக் கொடுக்கின்றன



**கார்த்திகி**

வாய்ப்பு என்பது பறித்துக் கொள்வதில்லை, திறமையால் நாம் தேடிக்கொள்வது..! திறமையில் கவனம் செலுத்து வாய்ப்பு உன்னைத் தேடி வரும்..!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விபத்திற்குள்ளான கப்பலில் பயணித்த 303 பேரும் இலங்கையர்கள் என அடையாளம்

(கொழும்பு)

சிங்கப்பூருக்கு அருகிலுள்ள சர்வதேச கடற்பரப்பில் மீட்கப்பட்ட கப்பலில் இருந்த 303 பேர் இலங்கையர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



அந்த கப்பலில் இருந்த இலங்கையர்கள் குழு தற்போது ஜப்பானிய கப்பல் மூலம் வியட்நாமுக்கு அழைத்துச் செல்லப்படுவதாக வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

இவர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு வியட் நாம் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

303 இலங்கையர்களை ஏற்றிச் சென்ற இலங்கை மீன்பிடிக் கப்பல் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வியட்நாம் மற்றும் சிங்கப்பூருக்கு அருகிலுள்ள கடலில் விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (நி)

# வடக்கில் மாவீரர் தின நிகழ்வுகளில் புலிகள் பற்றிய பிரசாரத்தை தவிருங்கள்

## ஏற்பாட்டாளர்களுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லது அதன் உறுப்பினர்கள் மீதான எந்தவொரு பிரசாரத்தையும் தவிர்க்குமாறு பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் வடக்கில் மாவீரர்தின நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் தரப்பினருக்கு அறிவித்துள்ளனர்.

இந்த அறிவிப்பை மீறும் எந்தவொரு நபரையும் கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

வடக்கில் ஒவ்வொரு வருடமும் நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் தினம் நினைவு கூரப்படுகிறது.

வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கடவுச்சீட்டு விநியோகத்தில் தாமதம்

(கொழும்பு)

கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கடவுச்சீட்டுகள் விநியோகிக்கும் நடவடிக்கை தாமதமடைந்துள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடவுச்சீட்டு பெறுவதற்கான விண்ணப்பங்கள் மறு அறிவித்தல் வரை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என திணைக்களம் தெரிவித்துள்ளது.

கட்டமைப்பை வழமைக்குக் கொண்டுவரும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக திணைக்களத்தின் ஊடகப்பேச்சாளர் பியுமி பண்டார தெரிவித்துள்ளார். (நி)


# முதலாம் ஆண்டு நினைவு நாள்



அமரர்.முருகேசு குலரத்தினம்

பிறப்பு 19.06.1936 இறப்பு:- 20.10.2021



அமரர்.குலரத்தினம் செல்வமலர்

பிறப்பு 24.06.1940 இறப்பு:- 17.09.2021

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வானுறையும் தெய்வங்களாக எமை
பெரு விருட்சங்களாக வாழ வைத்த தெய்வங்களை
நாம் என்றும் மறவோம்.

(13381)

என்றும் நினைவுகளுடன்
திரு திருமதி.பத்மகாந்தன் குகமலர்
திரு திருமதி.குகச்சந்திரன் கதிர்விழி (பவானி)
திரு திருமதி.இராஜேஸ்வரன் பொன்மதி
திரு திருமதி.தர்மலிங்கம் செல்வமதி
திரு திருமதி.குகேந்திரன் ரஜனி

இராஜஉதயம்,
மனோகரா,
அல்வாய்.


# பரீட்சைகள் பிற்போடப்பட மாட்டாது கல்வி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

க.பொ.த. உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை என்பன பிற்போடப்பட மாட்டாது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.



பல்வேறு காரணங்களால் உயர்தரப் பரீட்சை மற்றும் புலமைப்பரிசில் பரீட்சையை பிற்போடுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டமைக்கு இணங்க பரீட்சை திகதியை நிர்ணயித்ததாக குறிப்பிட்டார்.

நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தின் போதே கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் டிசெம்பர் 18 ஆம் திகதியும், உயர்தரப் பரீட்சை 2023 ஜனவரி 23 முதல் பெப்ரவரி 17ஆம் திகதி வரையிலும் நடத்துவதற்கு கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது. (நி)

# இராசிபலன்

09.11.2022
ஐப்பசி 23, புதன்கிழமை
பிரதமை பிற்பகல் 5.33 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 3.49 மணிவரை
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை
கார்த்திகை விரதம்
சந்திராஷ்டமம்
சுவாதி

வளவன்

**மேஷம்:** யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும், காலைப் பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**கடகம்:** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:** சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, கவலைகள் தீர இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.

**மகரம்:** ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், சுப செய்திகள் வந்து சேரலாம், எதிர்கால முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**ரிஷபம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம், கற்பனை மிகுதியான நாள்.

**சிம்மம்:** கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள், செய்தொழிலில் மேன்மையுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், எடுத்த காரியங்களில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண வேண்டிய நாள், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும், போசன சுகமுண்டு.

**கும்பம்:** சுப தகவல்கள் வந்து சேரலாம், வளர்ச்சிப் பாதைக்கு நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், நீங்கள் தேடிச் சென்று பார்க்க நினைத்த நபர் உங்கள் இல்லம் தேடி வரலாம்.

**மிதுனம்:** எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டால் திருப்தி காணவேண்டிய நாள்.

**கன்னி:** பிரிந்து சென்றவர்கள் பிரியமுடன் வந்திணைவர், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**தனுசு:** புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், போட்டிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், கடன் சுமை குறைய நடவடிக்கை எடுப்பீர்கள், உடல் நலன் சீராகும்.

**மீனம்:** முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வரலாம், வழிபாட்டால் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ளலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்.

மற்றவர்களை நம்பும் அளவுக்கு உன்னையே நீ நம்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலணை பிரதேச சபை
# 2023 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன் சந்தைகள், இறைச்சிக்கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், கடைகள் என்பவற்றை 01.01.2023 தொடக்கம் 31.12.2023 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:- 10.11.2022 முதல் 23.11.2022 மதியம் 02.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 24.11.2022 பி.ப 12.00 மணி வரை
கேள்வி திறக்கும் திகதி:- 24.11.2022 பி.ப 01.30 மணி
மீளளிக்கப்படாத கேள்விப்படிவக்கட்டணம் ரூபா 2000.00

| தொ.இல | சந்தைகளின் பெயர் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் | 2023 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த தொகை |
|---|---|---|---|---|
| 1 | வேலணை செட்டிபுலம் மீன் சந்தை | ------------ | 5000.00 | 42,460. |
| 2 | வேலணை அம்பிகை நகர் மீன் சந்தை | ------------ | 5000.00 | 17,600. |
| 3 | சரவணை மீன் சந்தை | ------------ | 5000.00 | 9,856. |
| 4 | அல்லைப்பிட்டி மீன் சந்தை | ------------ | 5000.00 | 121,000. |
| 5 | நயினாதீவு மீன் மரக்கறிச்சந்தை | ------------ | 5000.00 | 38,060. |
| 6 | மண்டைதீவு வாராந்த சந்தை | ------------ | 5000.00 | 11,550. |
| வேலணை துறையூர் மொத்த மீன் விற்பனைச் சந்தையும் சந்தையில் அமைந்துள்ள கடைகளு | | | | |
| 7 | வேலணை துறையூர் மீன் சந்தை | ------------ | 5000.00 | 220,000. |
| 8 | கடை இல – 02 | 1000.00 | 5000.00 | 31,600. |
| 9 | கடை இல – 03 சிற்றுண்டிச்சாலை | 1500.00 | 5000.00 | 134,310. |
| 10 | கடை இல – 04 | 1000.00 | 5000.00 | 34,760. |
| 11 | கடை இல – 05 | 1000.00 | 5000.00 | 38,500. |
| 12 | கடை இல – 06 கோழிக்கடை | 1000.00 | 5000.00 | 37,600. |
| வேலணை பொதுச்சந்தை (6ம் வட்டாரம்) | | | | |
| 13 | மீன் மரக்கறிச்சந்தை | ------------ | 5000.00 | 33,550. |
| 14 | சிற்றுண்டிச்சாலை | 1,750.00 | 5000.00 | 27,600. |
| 15 | கோழிக்கடை | 750.00 | 5000.00 | 230,500. |
| புங்குடுதீவு முற்றவெளிச் சந்தையும் கடைத்தொகுதியும் | | | | |
| 16 | கோழிக்கடை | 500.00 | 5000.00 | 170,500. |
| 17 | கடை இல – 05 சிற்றுண்டிச்சாலை | 600.00 | 5000.00 | 51,700. |
| 18 | புங்குடுதீவு முற்றவெளி மீன் மரக்கறிச்சந்தை | ------------ | 5000.00 | 115,500. |
| நயினாதீவு கடைத்தொகுதி | | | | |
| 19 | கடை இல – 01 | 1000.00 | 10000.00 | 120,000. |
| 20 | கடை இல – 02 | 1000.00 | 10000.00 | 120,000. |
| 21 | கடை இல – 03 | 1000.00 | 10000.00 | 120,000. |
| 22 | கடை இல – 04 | 1000.00 | 10000.00 | 120,000. |
| 23 | கடை இல – 05 | 1000.00 | 10000.00 | 120,000. |
| 24 | கடை இல – 06 | 1100.00 | 11000.00 | 132,000. |
| 25 | கடை இல – 07 | 1100.00 | 11000.00 | 132,000. |

**பொதுவான நிபந்தனைகள்:- சந்தைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்வியில் பங்குபற்ற விரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமுகமளித்தல் வேண்டும்.
3. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **"தவிசாளர், பிரதேச சபை, வேலணை"** எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியில் **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம் "** என்ற முகவரிக்கு **24.11.2022** ம் திகதி நண்பகல் **12 மணிக்கு** முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
4. பொதுச்சந்தைகளில் இருந்து 500மீற்றர் சுற்றளவுள்ள எல்லைக்குள் மரக்கறி, பழங்கள், தேங்காய், கோழி இறைச்சி போன்ற பொருட்கள் விற்பனை செய்யமுடியாது.
5. கடைகள், இறைச்சிக் கடைகள் வருடாந்த உரிமத்தினை செலுத்துதல் வேண்டும்.
6. தெரிவு செய்யப்படும் சந்தைகளின் சித்திகர கேள்வியாளர் சித்திகர தொகையின் 1/3 பங்கினையும் தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடையின் சித்திகர கேள்வியாளர் சித்திகர தொகையின் 2/3 பகுதியினையும் **30.11.2022** திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.
7. செய்து கொள்ளப்படும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மீறும் பட்சத்தில் குறித்த ஒப்பந்தத்தை இரத்து செய்யும் உரிமை பிரதேச சபைக்கு உண்டு.
8. தவறுநர் பட்டியலில் உள்ளவர்கள் கேள்வி கோரலில் பங்குபற்ற முடியாது.
9. மேலதிக விபரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.

**நிபந்தனைகள் - கடைத்தொகுதி**

1. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.
2. கேள்வி கோரலில் சித்திபெற்றவர்கள் குறித்த கேள்வித்தொகையினை (Key money) ஒரே தடவையில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.
3. மூன்று மாத வாடகையினை முற்பணமாக செலுத்துதல் வேண்டும்.
4. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினைச் செலுத்துதல் வேண்டும். குறித்த மாத வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் **10** ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான தாமதக் கட்டணப் பணமாக குறித்த மாத வாடகைத் தொகையில் **10%** அறவிடப்படும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகைப்பணத்தினை **டிசம்பர் மாதம் 30** ஆம் திகதிக்கு முன்னதாக செலுத்துதல் வேண்டும்.
5. சித்திகாரர் வேலணை பிரதேச சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கிணாங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
6. வருடந்தோறும் சபையினால் தீர்மானிக்கப்படும் வியாபார வரி வியாபார உரிமக் கட்டணத்தினை செலுத்தி வியாபார அனுமதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
7. கடைகள் யாவும் தற்போதுள்ள நிலையிலேயே வழங்கப்படும்.
8. பராமரிப்பு வேலைகள் மற்றும் கழிவகற்றல் என்பவற்றை தாங்களே மேற்கொள்ளல் வேண்டும்.

**திரு.ந.கருணாகரகுருமூர்த்தி,**
**தவிசாளர், வேலணை பிரதேச சபை.**

**திகதி:- 09.11.2022**

(C-52234)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரா.சம்பந்தனுக்கு 'ஜனநாயக பொன்' விருது



(யாழ்ப்பாணம்)

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கு "ஜனநாயகப் பொன்" விருது வழங்கப்பட்டுள்ளது.

"இன்ஸிரியூட் ஒப் பொலிட்டிக்ஸ்" நிறுவனத்தால் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக தம்மை அர்ப்பணித்த மூத்த அரசியல் பிரமுகரை அங்கீகரிப்பதற்காக வழங்கப்படுகின்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் சபாநாயகரும் சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் தலைவருமான கரு ஜயசூரியவும் கலந்துகொண்டார். (நி)

## ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களை நிரப்ப கல்வி அமைச்சு திட்டம்

(கொழும்பு)

வருட இறுதியில் ஏற்படும் 32 ஆயிரம் ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இதற்கமைவாக, 22 ஆயிரம் பட்டதாரிகள் ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்ளப்பட வுள்ளனர் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரி வித்தார்.

நேற்று முன்தினம் கண்டி யில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டபோதே இவ் வாறு தெரிவித்தார்.

தற்போது பாடசாலைகளில் 22 ஆயிரம் ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன. அமுலுக்கு வரும் புதிய ஓய்வூதியக் கொள்கை காரணமாக இந்த வருட இறுதியில் சுமார் 10 ஆயிரம் ஆசிரியர்கள் ஓய்வு பெறலாம் என எதிர்பார்க்கப்படு கிறது.

ஆரம்பத் திட்டமாக பட்டதாரி ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான பரீட்சையை அடுத்த மாதம் நடத்த திட்டமிடப்பட்டுள் ளது.

தற்போது அபிவிருத்தி உதவியாளர்களாக பணிபுரிபவர்களும், அரச சேவையில் உள்ள ஏனைய பட்டதாரிகளும் இதற்காக விண்ணப்பிக்கலாம். இதற்கு அரச சேவைகள் ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது என்றும் கல்வி அமைச்சர் தெரிவித்தார்.

அடுத்த வருடம் முதல் பாடசாலை தவணை ஆரம்பிக்கும் போது திட்டமிட்டபடி பாடப் புத் தகங்களை வழங்க தேவை யான ஒழுங்குகள் மேற்கொள் ளப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த அமைச்சர் இதற்காக இந்திய கடனுதவி கிடைக்கப் பெற்று ள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (நி)

### எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டாலும்
## முச்சக்கரவண்டிக்கான கட்டணத்தை குறைக்கும் சாத்தியம் இல்லை
### முச்சக்கரவண்டி சாரதிகள் தொழிற்சங்கம்

(கொழும்பு)

எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டாலும் முச்சக்கரவண்டிக்கான கட்டணத்தைக் குறைக்கும் சாத்தியம் இல்லை என அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

முச்சக்கரவண்டி கட்டணத்தை குறைக்க வேண்டுமாயின் வாடகை முச்சக்கர வண்டிகளுக்கு தினமும் 5 லீற்றர் பெற்றோல் வழங்கப்பட வேண்டுமென அதன் தலைவர் லலித் தர்மசேகர தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டால் நாடளாவிய ரீதியில் முச்சக்கரவண்டி கட்டணத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அகில இலங்கை முச்சக்கரவண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக் தெரிவித்தார். (நி)

## நெடுந்தூர பேருந்து நிலைய தரிப்பிடத்தில் ஆரம்பமான தனியார் போக்குவரத்து சேவைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் காணப்படும் போக்குவரத்து நெருக்கடிகளைக் கருத்திற் கொண்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நெடுந்தூர பேருந்து நிலையத்திலிருந்து அனைத்து உள்ளூர் மற்றும் வெளியூருக்கான தனியார் பயணிகள் போக்குவரத்து சேவைகள் நேற்று காலை முதல் ஆரம்பிக்கப்பட்டன.

மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் , ஆணையாளர் த.ஜெயசீலன், தனியார் பேருந்து சங்கங்களின் தலைவர், பிரதிநிதிகள்,பொலிஸார் இது தொடர்பில் நேரில் சென்று பார்வையிட்டதுடன் தற்போது ஏற்படுகின்ற சில குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பில் ஆராயப்பட்டன.போக்குவரத்து சேவைகளில் ஏற்படுகின்ற இடர்பாடுகளை இனங்கண்டு அடுத்த வாரம் அது தொடர்பில் ஆராய்ந்து இத் திட்டத்தினை மேம்படுத்துவதாகவும் மாநகர முதல்வர் தெரிவித்தார். (நி-6-33)

# பொது அறிவித்தல்- வேலணை பிரதேச சபை

**1. படவரைஞர்களை பதிவு செய்தல்**

2023 ம் ஆண்டு படவரைஞர்களாக பதிவு செய்ய விரும்புவோர்களில் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்தோர் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் பதிவினை புதிப்பிப்பதோடு, புதிதாக பதிவு செய்ய விரும்புவோர் 2023 ம் ஆண்டு ஜனவரி 31 ம் திகதிக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளவும். நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிபந்தனைகளுக்கு அமைவாகவே பதிவுகள் மேற்கொள்ளப்படும். மேலதிக விபரங்களிற்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். (021 221 1506)

**2. ஒப்பந்தகாரரைப் பதிவுசெய்தல்**

2023ம் ஆண்டிற்கான நிர்மாணப் பொறியியல் வேலைகளை செய்து வழங்குவதற்கு தேசிய நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பதிவை வைத்திருக்கும் ஆர்வமுடைய மனுதாரர்கள் பதிவை மேற்கொள்ள முடியும்.

**3. வழங்குனரைப் பதிவு செய்தல்**

2023ம் ஆண்டில் சபைக்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு பதிவு செய்து கொள்ள விரும்பும் தகைமை வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 15.01.2023 திகதி வரை தலைமை அலுவலகத்தில் விண்ணப் பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

**4. வியாபார உரிம அனுமதிப்பத்திரம்**

இப் பிரதேசசபை எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்கு பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை மண்டைதீவு. அல்லைப்பிட்டி. வேலணை. புங்குடுதீவு. நயினாதீவு ஆகிய உப அலுவலகங்களில் 2023ம் ஆண்டு ஜனவரி 15ம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31-03-2023 ம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade License) பெற்றுக் கொள்ளவும். 31-03-2023ம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**5. சூழல் பாதுகாப்பு உரிமம்**

தொழில் / வியாபார நடவடிக்கைகளை பிரதேச சபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து உரிய கட்டணத்தை செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

**6. துவிச்சக்கரவண்டி உரிமம், மிருகங்களுக்கான உரிமம்.**

துவிச்சக்கரவண்டிகள். வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 31-03-2023 ம் திகதிக்கு முன்னர் உரிய உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2023 ம் ஆண்டிற்கான துவிச்சக்கரவண்டி. வளர்ப்பு நாய்களுக்கான உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும்.

**7. விளம்பரங்கள் அமைத்தல்/ காட்சிப்படுத்தல் (02.02.2016 ம் திகதிய வடக்கு மாகாண சபையின் நியமத் துணை விதி)**

பிரதேச சபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேச சபையின் அனுமதியினைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்தல் வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும்.

**8. கட்டட அனுமதி வழங்கல். (நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய)**

- தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள். மதில்கள், எல்லைத்தூண்கள் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டடத்தினை புனரமைப்பதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டடங்கள். மதில்கள். எல்லைத்தூண்கள் அமைக்கப்படல் வேண்டும்.
- புதியகட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியில் இருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாது விடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியை புதிப்பிக்க வேண்டும்.
- அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேச சபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் (COC) பெற்றுக் கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.
- சபை எல்லைக்குள் குழாய்க்கிணறு அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும் என்பதுடன் அனுமதி பெறப்படாத கட்டடங்களிற்கு தண்டப்பணம் அறவிடப்படும்.

**9. வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும்**

1. வீதி ஒழுங்கைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது காட்சிப்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடத்துமாறு வர்த்தக நிலைய உரிமையாளருக்கு அறியத்தருகின்றேன்.
2. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்றுவட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறி, பழங்கள், தேங்காய், முட்டை என்பன விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.

**10. கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல்.**

சபை எல்லைக்குள்ளாக ஏதேனும் பொது வழி மீது அல்லது ஏதேனும் பொது வழி அருகில் கால்நடைகள் கட்டப்படவோ அல்லது அலைந்து திரியவோ விடாது கால்நடைகளை உரிமையாளர்கள் கட்டி வளர்க்க வேண்டும் என்பதோடு கட்டி வளர்க்காது விட்டால் சபையினால் பிடிக்கப்பட்டு பிரதேச சபைகள் சட்டத்திற்கமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**11. பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்**

திண்மக் கழிவுகளை பிரதேச சபைக்கு ஒப்படைக்கும் போது அவை தரம் பிரித்து வழங்க வேண்டும் என்பதுடன் திண்மக் கழிவுகள் பொது இடங்களில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்பட வேண்டும். அல்லாதவிடத்து பிரதேச சபைச் சட்ட ஏற்பாட்டிற்கு அமைவாக பிரதேச சபையால் தன்னுரித்தாக்கப்பட்டு துப்பரவு செய்யப்படும்.

**12. பொதுச் சுகாதாரத்தை பேணுதல்**

உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்.

**நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி,**
**தவிசாளர்,**
**வேலணை பிரதேசபை.**

(H-333)

# மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும்




**திருமதி. சிவனேந்திரன் சறோஜினிதேவி**

மனைப்பொருளியல் பாட ஆசிரியர்
யா/ வீமன்காமம் மகாவித்தியாலயம்
மாவிட்டபுரம், தெல்லிப்பழை

எங்கள் பாடசாலையில் ஆசிரியராக சேவையாற்றி அகவை அறுபதில் ஓய்வு பெற்றுச் சென்ற திருமதி.சிவனேந்திரன் சறோஜினிதேவி அவர்களின் சேவையைப் பாராட்டி கௌரவிப்பதோடு எதிர்காலம் சிறக்க வாழ்த்துகிறோம்.

[13389]

**ஆசிரியரின் சேவை விபரம்**

| பாடசாலை | | சேவைக்காலம் |
|---|---|---|
| நு/தலவாக்கலை தமிழ் மகாவித்தியாலயம் | - | 28.06.1985- 09.12.1988 |
| யா/கோப்பாய் ஆசிரியர் கலாசாலை | - | 10.02.1988 - 31.12.1989 |
| நு/தலவாக்கலை தமிழ் மகாவித்தியாலயம் | - | 01.01.1990 -29.03.1990 |
| கிளி/ இந்துக் கல்லூரி | - | 30.03.1990 -31.12.2007 |
| கிளி/மகாவித்தியாலயம் | - | 01.01.2008 -04.03.2008 |
| கிளி/ புதுமுறுப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயம் | - | 05.03.2008-31.12.2010 |
| யா/ஏழாலை மகாவித்தியாலயம் | - | 01.01.2011 - 11.03.2014 |
| யா/வீமன் காமம் மகாவித்தியாலயம் | - | 12.03.2014-27.07.2022 |

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/ வீமன்காமம் மகாவித்தியாலயம் மாவிட்டபுரம், தெல்லிப்பழை.

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1975 கிறிஸ்தவம் RC
உயரம்:5'11"
தகைமை/ தொழில்: கணனி நிறுவன உரிமையாளர்
எதிர்பார்ப்பு:படித்த தொழில் புரியும் பெண்
தொ.இ: B/10320

பிறப்பு:1982 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 1
கி.பா:25 ¼ சூரி 1 செவ் 3 இல்
உயரம்:6'
தகைமை/ தொழில்: O/L பிரான்ஸ்
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண்
தொ.இ: B/10322

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்; ரேவதி 1
கி.பா: சூரி.செவ் 8 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:O/L சுகாதார திணைக்களம்
எதிர்பார்ப்பு: அரச தொழில் உள்நாடு மட்டும்
தொ.இ: B/10325

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: திருவோணம் 4
கி.பா: சூரி 9 செவ் 8 இல்
உயரம்:5'6"
தகைமை/ தொழில்: HND விவசாய போதானாசிரியர்
எதிர்பார்ப்பு: அரச தொழில் ஆசிரியர் விரும்பத்தக்கது
தொ.இ: B/10333

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: சுவாதி 2
கி.பா: சூரி 5 செவ் 12 இல்
உயரம்:5'4"
தகைமை/தொழில்:BSc அரச தொழில்
எதிர்பார்ப்பு:பட்டதாரி உயர்பதவி
தொ.இ:G/11081

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 1
கி.பா: சூரி 12 செவ் 9 இல்
உயரம்:5'2"
தகைமை/ தொழில்:BSc
எதிர்பார்ப்பு:பட்டதாரி அரச தொழில்
தொ.இ:G/11092

பிறப்பு:1997இந்து
நட்சத்திரம்: மகம் 1
கி.பா: சூரி 2 செவ் 6 இல்
உயரம்:157 cm
தகைமை/தொழில்:Bcom
எதிர்பார்ப்பு:கணக்குத்துறை சார்ந்தது விரும்பத்தக்கது
தொ.இ:G/11103

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 3
கி.பா: சூரி 2 செவ் 3 இல்
உயரம்:5'2"
தகைமை/தொழில்: BA பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச தொழில் தகுந்தவரன்
தொ.இ: G/11128

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**[illegible] கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனேடிய தேர்தல்களில் சீனா தலையீடு ஜஸ்டின் ட்ரூடோ குற்றச்சாட்டு



(ஒட்டாவா)

கனேடிய தேர்தல்களில் தலையீடு செய்வதற்கு சீனா முயற்சிப்பதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ குற்றம் சுமத்தியுள்ளார்.

கனேடிய நிறுவனங்களை இலக்கு வைத்து, ஜனநாயகத்துடன் ஆக்ரோஷமான விளையாட்டு நடத்துவதாக அவர் விமர்சித்துள்ளார்.

கனடாவில் அண்மைக்கால தேர்தல்களில் சீனாவின் ஆதரவு பெற்ற வலையமைப்பு ஒன்றை கனேடிய புலனாய்வாளர்கள் அடையாளம் கண்டுள்ளதாக செய்தி வெளியானதையடுத்து பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ இவ்வாறு தெரிவித்தார்.

2019 ஆம் ஆண்டு கனடாவின் சமஷ்டி தேர்தல்களில் குறைந்தபட்சம் 11 பேர் சீனாவின் ஆதரவைப் பெற்றிருந்தனர்.

பல வேட்பாளர்களுக்கு சீனா பணம் வழங்கியதாகவும் சில வேட்பாளர்களின் பிரச்சார ஆலோசகர்களாக சீனர்கள் செயற்பட்டதாகவும் புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்தனர் என கனேடிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஒன்டாரியோவை தளமாகக் கொண்ட மாகாண சட்டசபை உறுப்பினர் ஒருவருக்கு ஊடாக 250,000 கனேடிய டொலர் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டொரண்டோவிலுள்ள சீனத் தூதரகத்திலிருந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், கொள்கைளில் செல்வாக்கு செலுத்துவதற்காக, பதவியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் அலுவலகங்களில் தமது செயற்பாட்டாளர்களை வைப்பதற்கு முயற்சிக்கப்பட்டதாகவும் செய்தி வெளியாகியுள்ளது. (நி)

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியா? முக்கிய அறிவிப்பு வெளியிடும் டிரம்ப்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் 2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள நிலையில் அடுத்த வாரம் மிகப்பெரிய அறிவிப்பு ஒன்றை வெளியிடப் போவதாக டிரம்ப் அறிவித்துள்ளார்.

2016 முதல் 2020 ஆம் ஆண்டு வரை 4 ஆண்டுகள் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்தவர் டொனால்டு டிரம்ப். பல்வேறு அதிரடி நடவடிக்கைகளுக்கு பெயர் போனவர்.

இவர் அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் வட கொரியாவுடன் நட்பு, இஸ்ரேல் - அரபு நாடுகள் இடையேயான நட்பை ஏற்படுத்துவது உட்பட பல்வேறு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதேவேளை, 2020 ஆம் ஆண்டு டொனால்டு டிரம்ப் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். ஆனால், தேர் தலில் தோல்வியடைந்தார். புதிய ஜனாதிபதியாக ஜோ பைடன் தேர்தெடுக்கப்பட்டார்.

இதனிடையே, 2024 ஆம் ஆண்டு நடைபெற உள்ள ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் போட்டியிட அதிக வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகி வருகின்றன. (நி)

# நேபாளத்தில் 4.5 ரிக்டர் பூகம்பம்

(காத்மண்டு)

நேபாளத்தில் நேற்று அதிகாலை 4.5 ரிக்டர் அளவிலான பூகம்பம் ஏற்பட்டதாக அந்நாட்டின் தேசிய நிலநடுக்கவியல் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. தலைநகர் காத்மண்டிலிருந்து வடகிழக்காக 155 கிலோ மீற்றர் தூரத்தில் இப்பூகம்பம் ஏற்பட்டதாக மேற்படி மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. 100 கிலோமீற்றர் ஆழத்தில் இப்பூகம்பம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# மன்னர் சார்லஸின் முடிசூட்டு விழாவையொட்டி பொது விடுமுறை அறிவித்தார் பிரதமர் ரிஷி

(லண்டன்)

மூன்றாம் சார்லஸ் மன்னரின் முடிசூட்டு விழாவை முன்னிட்டு அடுத்த ஆண்டு மே 8 ஆம் திகதி பொது விடுமுறை அளிக்கப்படும் என்று பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் அறிவித்துள்ளார்.

மூன்றாம் சார்லஸ் மன்னரின் முடிசூட்டு விழா மே 6 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறுமெனவும் அவர் தெரிவித்தார்.

73 வயதான சார்லஸ், தனது தாயார் இரண்டாம் எலிசபெத் இறந்தவுடன் தானாகவே மன்னரானார். சில நாட்களுக்குப் பிறகு, செயின்ட் ஜேம்ஸ் அரண்மனையில் நடந்த விழாவில் அவர் ஐக்கிய இராச்சியத்தின் புதிய மன்னராக முறையாக உறுதிப்படுத்தப்பட்டார்.



இதுகுறித்து பிரதமர் ரிஷி சுனக் கூறுகையில், 'ஒரு புதிய மன்னரின் முடிசூட்டு விழா நம் நாட்டிற்கு ஒரு தனித்துவமான தருணம். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வை அங்கீகரிக்கும் வகையில், அடுத்த ஆண்டு முழு பிரித்தானியாவிற்கும் கூடுதல் வங்கி விடுமுறையை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்' என சுனக் தெரிவித்தார்.

பக்கிங்ஹாம் அரண்மனை கடந்த மாதம் லண்டனில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் மே 6 ஆம் திகதி மன்னரின் முடிசூட்டு விழா நடைபெறும் என்று அறிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கடும் கோடை வெப்பம் ஐரோப்பாவில் 15 ஆயிரம் பேர் இதுவரை உயிரிழப்பு



(ஜெனிவா)

ஐரோப்பாவில் நடப்பு ஆண்டில் ஏற்பட்ட கடும் கோடை வெப்பத்திற்கு 15 ஆயிரம் பேர் பலியாகி உள்ளனர் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. இது பற்றி உலக சுகாதார ஸ்தாபனத்தின் மண்டல இயக்குநர் ஹான்ஸ் ஹென்றி குளுஜ் அறிக்கை ஒன்றை வெளியிட்டு உள்ளார்.

அதில், இதுவரை கிடைத்த தகவலின்படி, ஐரோப்பாவில் நடப்பு ஆண்டின் கோடை காலத்தில் 3 மாதங்களில், கடும் வெப்பத்திற்கு 15 ஆயிரம் பேர் உயிரிழந்து உள்ளனர். அவர்களில் ஜேர்மனி நாட்டில் அதிக அளவாக 4 ஆயிரத்து 500 பேர், ஸ்பெயின் நாட்டில் 4 ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கின்றனர்.

பிரித்தானியாவில் 3,200 பேரும், போர்த்துக்கல்லில் ஆயிரத்திற்கும் கூடுதலானோர் உயிரிழந்து உள்ளனர் எனவும் தெரிவித்து உள்ளார்.

எனினும், இந்த எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஏனெனில், இன்னும் பல நாடுகள் வெப்ப பாதிப்பிற்கு கூடுதலான மக்கள் உயிரிழந்த தகவல்களை அளித்து வருகிறது.

இதற்கு எடுத்துக்காட்டாக, நடப்பு ஆண்டு 2022 ஆம் ஆண்டு ஜூன் 1 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 22 ஆம் திகதி வரையில் 11 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்து உள்ளனர் என பிரான்ஸ் நாட்டின் தேசிய புள்ளியியல் மற்றும் பொருளாதார படிப்புகளுக்கான அமைப்பு தெரிவித்துள்ளது.

இது கொரோனா பெருந்தொற்று பரவலுக்கு முன்பு, கடந்த 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது அதிகம். இதற்கு, நடப்பு ஆண்டின் ஜூன் மாதத்தின் மத்தியில் முதலில் வெப்ப அலை தொடங்கி பின்பு அது ஜூலை மாத மத்தியில் கடும் வெப்ப அலை பரவலான போது அதனால் மக்களில் பலர் உயிரிழந்தனர் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# சர்வதேச அரங்கில் எமக்கான மதிப்பை கெடுக்கிறது அமெரிக்கா- வடகொரியா சாடல்

(பியாங்யாங்)

உக்ரைனில் நடந்த போருக்காக ரஷ்யாவிற்கு இரகசியமாக ஆயுதங்களை அனுப்புவதாக அமெரிக்கா கூறியதை வட கொரியா நிராகரித்துள்ளது.

ரஷ்யாவிற்கு ஆயுதங்களை விற்கவில்லை என்றும் அவ்வாறு செய்யும் திட்டம் எதுவும் இல்லை என்றும் கூறியுள்ளது.

வடகொரியா ரஷ்யாவிற்கு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பீரங்கி குண்டுகளை வழங்குவதாக அமெரிக்காவிடம் தகவல் இருப்பதாக வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு செய்தித் தொடர்பாளர் ஜோன் கிர்பி கடந்த வாரம் கூறியதை அடுத்து, அதிகாரபூர்வ கொரிய மத்திய செய்தி நிறுவனமான கே.சி.என்.ஏ இன் இந்த அறிக்கை நேற்று செவ்வாய்க்கிழமை வந்துள்ளது.

வடகொரியா மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்க நாடுகளில் உள்ள நாடுகளின் வழியாக அனுப்புவதன் மூலம் ஏற்றுமதிகளை இருட்டடிப்பு செய்ய முயற்சிப்பதாகவும், ஏற்றுமதிகள் பெறப்பட்டதா என்பதை அமெரிக்கா கண்காணித்து வருவதாகவும் ஜோன் கிர்பி தெரிவித்தார்.

வடகொரிய பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் குற்றச்சாட்டுகளை வதந்தி என்றும், வடகொரியாவிற்கு ரஷ்யாவுடன் ஆயுத பரிவர்த்தனைகள் இருந்ததில்லை என்றும் எதிர்காலத்தில் அவ்வாறு செய்யும் திட்டம் இல்லை என்றும் தெரிவித்தார்.

அமெரிக்காவின் இத்தகைய நகர்வுகள் வடகொரியாவுக்கு எதிராக ஐ.நா பாதுகாப்பு சபையில் சட்டவிரோதமான தடைகள் தீர்மானத்தை செயற்படுத்துவதன் மூலம் சர்வதேச அரங்கில் வடகொரியாவின் மதிப்பைக் கெடுக்கும் அதன் விரோத முயற்சியின் ஒரு பகுதியாக நாங்கள் கருதுகிறோம் என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

வடகொரியா கடந்த வாரம் கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை உட்பட தொடர்ச்சியான ஆயுத சோதனைகளை நடத்தியதை அடுத்து கொரிய தீபகற்பத்தில் பதற்றங்கள் அதிகரித்துள்ள நிலையில், அமெரிக்காவும் தென்கொரியாவும் இதுவரை இல்லாத வகையில் மிகப்பெரிய விமானப்படை பயிற்சியை நடத்தியமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## மிளகு





**Botanical Name-**

**Family-**

மிளகு உண்டாகும் புதர்க் கொடி உயர்ந்த மலைச்சாரலில் வளர்கிறது. இக் கொடியில். விளையும் உலர்ந்த கனிகள் மிளகு ஆகும்.இலையுதிர் காலங்களில் கனிகள் தோன்றுகின்றன.எனினும் உலர்வதற்காக எமது இல்லங்கள் தோறும் பயன்படுத்தப்படுகிறது. உணவுக் கால்வாய் சம்பந்தமான பொதுவான நோய்களான வயிற்றுப்பொருமல், பசியின்மை, மாந்தம், உடல்வலி, குமட்டல் போன்ற நிலைமைகளில்

மிளகு -200 கிராம்
சுக்கு -25 கிராம்
வெந்தயம்-25 கிராம்
கொத்தமல்லி-25 கிராம்
கடுகு-25 கிராம்

என்னும் அளவில் எடுக்க வேண்டும்.இதில் மிளகை தூய நீரில் கழுவி நிழலில் உலர்த்தி மண்சட்டியில் போட்டு சிறிது நெய்யை விட்டு இளம் வறுவலாக வறுத்து எடுத்துக் கொள்ளவும். சுக்கை தோல் நீக்கி ஒன்றிரண்டைத் தட்டி மண்சட்டியில் சிறிது நெய்யை விட்டு சிவக்க வறுத்து எடுத்துக் கொள்ளவும். வெந்தயத்தை தூய நீரில் கழுவி நிழலில் உலர்த்தி பிசின் போல நெய்யில் சிவக்க வறுத்து எடுத்துக் கொள்ளவும்.கொத்தமல்லியை உடைத்து மண் சட்டியில் சிறிது நெய்யை விட்டு சிவக்க வறுத்து எடுத்துக் கொள்ளவும் கடுகை பிசைந்து நீரில் கழுவி நிழலில் உலர்த்தி சிறிது நெய் விட்டு ஒன்றாக வறுத்து எடுத்துக் கொள்ளவும்.எல்லாச் சரக்குகளையும் ஒன்றாகப் போட்டு நன்றாக இடித்து சிறிய கண்ணுடைய அரிதட்டில் அரித்து சேகரித்து வைத்துக் கொள்ளவும்.சுடு சோற்றில் தேவையான அளவு போட்டு சிறிது நெய்யும் சேர்த்துண்ண மேற்கூறிய நோய்கள் அகலும்.

நாட்பட்ட இருமலுக்கு ஒரு சுத்தமான சட்டியை அடுப்பில் வைத்து காயவிட்டு அதில் கொஞ்சம் மிளகுகளைப் போட்டு நன்கு சிவக்க வறுக்க வேண்டும்.மிளகு சிவந்து கருகி தீப்பொறி பறக்கும் சமயத்தில் ஒரு டம்ளர் நீர்விட்டு நன்றாக மூடிக் கொதிக்கவிட்டு பின் இறக்கி அரைவாசியை சிறிது சீனி சேர்த்து காலையிலும் மறுபாதியை சிறிது சீனிசேர்த்து மாலையிலம் அருந்த இருமலுக்கு சிறந்த நிவாரணமாகும்.

வறட்டு இருமலுக்கு 200 மில்லி பசுப்பாலில் கொஞ்சம் (1 தேக்கரண்டி) மிளகை தட்டிப் போட்டு நன்றாக கொதிக்க வைத்து சிறிது பனங்கற்கண்டும் சேர்த்து அருந்த வறட்டு இருமல் நீங்கும்.

காசநோய் உள்ளவர்கள் 100 கிராம் மிளகை உரலில் போட்டு நன்றாக இடித்து அரித்து வைத்துக் கொள்ளவும். பசு நெய் 10 மில்லியுடன் 1/2 தேக்கரண்டி மிளகு தூளை சேர்த்து குழைத்து காலை, மாலை அருந்த வேண்டும்.தொடர்ந்து 5 நாட்கள் எடுத்துவர குறி, குணங்கள் இவ்வாறு 5,6 முறை பயன்படுத்தலாம்.

ஆஸ்துமா நோய் உள்ளவர்கள் 100 கிராம் வில்வம் இலைத்தூளுடன் 10 கிராம் மிளகுத் தூள் சேர்த்து நாளுக்கு 5 கிராம் தேனில் சாப்பிட்டு வர ஆஸ்துமா குணமாகும்.

தேவையான அளவு மிளகை எடுத்து வாணெலியில் போட்டு வறுத்து எடுக்க வேண்டும்.மிளகிலிருந்து தீப்பொறி பறக்கும் வரை வறுத்துக் கொண்டே இருக்க வேண்டும். மேலும் வறுத்தால் மிளகு சாம்பலாக தீர்ந்து போகும்.

இவ் மிளகுச் சாம்பலை தேங்காய் எண்ணெயுடன் கலந்து சொறி, சிரங்கு உள்ள பகுதிகளுக்கு நன்றாக பூசிவர சிரங்கு குணமாகும்.

முகத்தில் ஏற்படும் முகப்பருமறைய மிளகு, சாதிக்காய், சந்தனம் மூன்றையும் அரைத்து பருவில் 3 நாட்கள் தொடர்ந்து தடவி வ்ர முகப்பரு மறையும்.

சளி, இருமல் தொல்லைக்கு 10 கிராம் மிளகையும் 10 கிராம் பனைவெல்லத்தையும் சேர்த்து நன்கு அரைத்து காலை,மாலை உட்கொள்ள சளி, இருமல் தீரும்.

மிளகு 5 கிராம் பனை வெல்லம் சிறிதளவு தண்ணீர்விட்டு அரைத்து உருண்டையாக்கி நச்சு பாதிப்பு உள்ளவர்கள் வாயிலிட்டு விழுங்க வேண்டும்.

பின்பு அடிக்கடி தாராளமாக நீர் பருகிவர நஞ்சு முறிந்து போகும்.வாய்வுத் தொல்லைகட்கு மிளகைப் பொடித்து பெருங் காயத்தை நெய்யில் வறுத்து பொடித்து சேர்த்துக் கொள்ள வேண்டும்.இச் சூரணத்தில் 1 தேக்கரண்டி அளவு சுடுநீருடன் சேர்த்து உட்கொள்ள வாய்வுத் தொல்லை நீங்கும்.விஷ ஜந்துக்கள் தீண்டினால் முதலுதவியாக 7 மிளகை எடுத்து ஒரு வெற்றிலையில் வைத்து மென்று சாப்பிட விஷம் இறங்கும்.

மிளகையும் அறுகம் புல்லையும் வேருடன் சேர்த்து சம அளவு எடுத்து குடிநீர் காய்ச்சி 30-60 மில்லி அளவு 15 நாட்களுக்கு ஒரு முறை குடித்து வர நோய் எதிர்ப்பாற்றல் அதிகரிக்கும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# 'உலக வறுமை சுட்டி' சுட்டிநிற்கும் எம் தேசத்தின் நிலை!

**(சென்ற வார தொடர்ச்சி)**

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

அறுவடைசெய்யும் பொருட்களை அவற்றின் பழுதடையும் தன்மைக்கேற்ப சேமித்து வைக்கவோ அல்லது அவற்றை தரமேற்றி வேறு பொருட்களாக மாற்றுதலோ சிறந்தது.

இவற்றிக்கு முன்னோடியாக கிராமத்து சந்தைகளை உருவாக்குவது பல வழிகளில் சிறந்தது. அதிகமாக உற்பத்தி செய்பவர் தமக்கு தேவையானவை போக மீதியை சேமிக்கவும் இன்னும் அருகில் விற்பனைக்கு வைக்கவும் வழி செய்தல் வேண்டும். அந்தந்த பிரதேசத்து மக்களை கிராமத்து சந்தைகளில் பொருட்களை வாங்கவும் விற்கவும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வழிவகைகளை உறுதி செய்தால் உற்பத்தியான பொருள் உணவாகவும் மேலதிகமானது விற்பனைக்காக அந்தந்த கிராமங்களுக்குள்ளேயே செல்வதனால் அவர்களுக்கான உற்பத்திச் செலவு மற்றும் ஆதாயம் முழுவதுமாக இவ்வாறான சந்தைப் படுத்தலுாடாக பெறப்படும் அதே நேரத்தில் பொருட்களை இடம்மாற்றும் வாகன செலவு, எரிபொருள் செலவு மற்றும் கூலி என்பனவற்றை கணிசமான அளவில் குறைத்துக் கொள்ளலாம்.

இதனால் பொருட்களை மக்கள் வாங்கக்கூடிய விலையிலும் விற்பனை செய்பவர் தமக்கான இலாபத்தை பெற்றுக் கொள்ளவும் வழிவகுக்கும். இதில் முக்கியமான விடயமாக மீண்டுமொரு முறை கொவிட் 19 போன்ற தொற்று நோய்கள் பரவுமாயின் அதற்கான முன்னோடியான செயற்பாடாக தொற்று நோய் பரவுவதை கட்டுப்படுத்தும் அதே நேரத்தில் உணவு அனைவருக்கும் கிடைக்கக் கூடியதாக செயற்படுத்தலாம். வருமுன் காப்போம் என்பதனை இந்த நேரத்தில் அவசியம் நாம் கடைப்பிடிக்க வேண்டும். கொவிட் வைரஸ் கற்பித்த பாடங்களை நாம் இலகுவில் மறந்து அலட்சியம் செய்யக் கூடாது. இன்னொருமுறை இவ்வாறான வீரியம் கொண்ட தொற்று நோய் எமது நாட்டில் பரவுமாக இருந்தால் அதனை எதிர்க்கும் சக்தி மக்களுக்கும் இருக்காது. அதற்கான மருத்துவ பொறிமுறையை ஏற்படுத்துவதற்காக நிதிவளமும் அரசுக்கு இருக்காது. ஏதிலும் நலிவடைந்த தேசமாக எம்மை நாமே அழித்துக் கொள்ளாது புத்திசாலித்தனமாக ஒற்றுமையாக இக்கால கட்டத்தை என்றுமில்லாத பேரிடராக வரித்து அதனை எதிர்கொள்ள வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் விரைந்தெடுத்தல் அவசியமாகும். வெளிநாடுகளுக்கு அலை வரும் படையெடுத்தால் எமது தேசத்தில் எமக்கான உணவையும் சுகாதாரத்தையும் கட்டிக் காப்பது யார் என்றொரு கேள்வி எழுகின்றது. எப்போதுமே நாம் வெளிநாட்டின் கைகளை தங்கி வாழ்ந்த வாழுகின்ற மக்களாகவே எம்மை ஆக்கிக் கொண்டிருக்கின்றோம். உள்ளூர் உணவுகளை சத்தான நோயெதிர்ப்பு தன்மையுடைய பழங்களை, காய் கனிகளை, மூலிகைத் தாவரங்களை எமது உணவில் சேர்த்துக் கொள்ளும் காலமிது. நாம் விரும்பியோ விரும்பாமலோ எமது பாரம்பரிய உணவினை உட்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றோம் என்பதனை மறந்து



## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

விடக்கூடாது: இது எமது தனிமனித மற்றும் குடும்ப சுகாதாரத்தை வளர்த்தெடுக்கும் நல்லதொரு செயற்பாடாக இப்பேரிடர் ஆக்கிவிட்டிருக்கின்றது. துன்பத்திலும் எமக்கான நன்மையான விடயங்கள் வெளிப்படுவது போல இதனைக் கொள்ள வேண்டும்.

எமது பிரதேசத்தின் உற்பத்தியை ஊக்குவிப்பதற்கான அனைத்து நடைமுறைகளையும் பிரதேச சபைகள், மாநகர சபைகள், விவசாய கழகங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் என அனைத்து கட்டமைப்புக்களும் ஒன்றிணைந்த செயற்றிட்டமாக உருவாக்க வேண்டும். அனைத்து மக்களின் வாழ்வாதாரத்திற்கு எந்தப் பங்கமும் வராமல் அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

காலங்கடந்து எதற்கான தீர்வையும் நாம் இருக்கின்ற நிலையில் வழுங்க முடியாது என்பதனை புரிந்து கொண்டால் ஒற்றுமையாக ஒருணர்வில் அனைவரும் இணைவதன் அவசியத்தை புரியலாம். உலக வறுமைச் சுட்டி காட்டியுள்ள எமது தேசத்தின் நிலை எமக்கான அறிவுறுத்தலாக நாம் விரைந்து செயற்படுவதற்கான வழிவகைகளை கட்டியங்கூறி நிற்கின்றது.

(முற்றும்)



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் சிறுபான்மையின மக்களுக்கான கௌரவமான அரசியல் தீர்வு கோரிய 100நாள் செயல் முனைவுப் போராட்டத்தின் நூறாவது நாள் போராட்டம் நேற்று வடக்கு,கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டது.
(படங்கள்: சுபேசன், கஜிந்தன், சப்தசங்கரி, ஆனந்தன், யோசப்நயன், சதீஸ்)

# நீண்டகாலமாக கைவிடப்பட்ட குளத்தினை புனரமைத்து தருமாறு கோரிக்கை



(நெளுக்குளம்)

வவுனியா மன்னகுளம் கிராம உத்தியோகத்தர் பிரிவுக் குட்பட்ட பகுதியில் நீண்ட காலமாக கைவிடப்பட்ட நிலையில் உள்ள மங்கைகொடி என்ற குளத்தினை புனரமைத்து தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை முன்வ்வத்துள்ளனர்.

180 குடும்பங்கள் வாழும் கொல்லர் புளியங்குளத்திற்கு பின்புறமாக அமைந்துள்ள மங்கை கொடி என்ற குளம் சுமார் 40 வருடங்களுக்கு முன்னர் உடைப்பெடுத்து திருத்தப்படாமல் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது.

குறித்த குளத்தினை திருத்தம் செய்து தரும் பட்சத்தில் அதன் கீழ் 360 ஏக்கர் வயல் நிலத்தினை துப்புரவு செய்து குடும்பத்திற்கு இரண்டு ஏக்கர் என்ற வீதத்தில் விவசாயம் செய்ய முடியும் எனவும் தெரிவித்தனர்.

விவசாயத்தினையே அடிப்படையாக கொண்ட இக்கிராம மக்கள் தமது வாழ்வாதாரத்தினை கருத்தில் கொண்டு மங்கைகொடி குளத்தினை புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-299)

## நாவற்குழி நெற்செய்கையாளர்களுக்கு
# இரண்டாம் கட்ட யூரியா உர விநியோகம்

(சாவகச்சேரி)

கைதடி கமநலசேவை நிலைய எல்லைப் பரப்பிற்கு உட்பட்ட நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பினருக்கான இரண்டாம் கட்ட யூரியா உர விநியோகம் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை கைதடி கமநல சேவை நிலையத்தில் இடம்பெறும் என கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இரண்டாம் கட்ட யூரியா உரம் ஒரு பரப்பிற்கு 1 கிலோ 200கிராம் என்ற அடிப்படையில் கிலோ ஒன்று 200ரூபாய் விகிதம் விநியோகிக்கப்படவுள்ளது.

அத்துடன் 12 பரப்பிற்கு உட்பட்ட சிறிய நெற்செய்கையாளர்களுக்கு பரப்பு ஒன்றிற்கு 2 கிலோ 40 கிராம் என்ற அடிப்படையில் ஒரு கிலோ 200 ரூபாய் விகிதம் வழங்கப்படும்.

எனவே நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பிற்குட்பட்ட விவசாயிகள் குறித்த தினத்தில் 2022 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரி பற்றுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை போட்டோ பிரதி சகிதம் சென்று இரண்டாம் கட்ட யூரியா உரத்தினை பெற்றுக் கொள்ள முடியும் என கமக்கார அமைப்பினர் தெரியப்படுத்தியுள்ளனர். (நி-6-30)

# கனமழையால் பெரும்போகம் பாதிப்பு
## முரசுமோட்டை விவசாயிகள் கவலை



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள சில தினங்கள் ஆன நிலையில் தொடர்ச்சியாக பெய்த மழையினால் நெல்மணிகள் முளைத்திறன் அற்ற நிலையில் காணப்படுவதாக விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இதன் காரணமாக ஒரே வயல்களை இரண்டு தடவைகள் அல்லது மூன்று தடவைகள் பயிர்ச்செய்கை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த சிறு போக பயிர்ச் செய்கையில் மேற்கொண்ட அறுவடை நெல்லினை தற்பொழுதும் விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ள நிலையில் வேறு தொழிலுக்கும் செல்ல முடியாத காரணத்தினால் தற்பொழுது பெரும் போக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வரும் நிலையில் விவசாயிகள் தொடர்ச்சியாக பாதிக்கப்படுவதாக முரசுமோட்டை விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இதன் காரணமாக பல விவசாயிகள் இம்முறை பெரும் போக பயிர்ச்செய்கையில் ஈடுபடாத நிலையில் காணப்படுவதாக மேலும் தெரிவித்தனர். (நி-6-316)




உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு அண்மையில் கல்லூரியின் திறந்தவெளி அரங்கில் இடம்பெற்றது.
(படம்: மகாலிங்கம்)

# ஹெரோயின், ஊசி மருந்துகளுடன் தருமபுரத்தில் ஒருவர் கைது



(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உழவனூர் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் ஊசி மருந்துகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து குறித்த பகுதியில் சுற்றிவளைப்பை முன்னெடுத்த போது வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் ஹெரோயின் மற்றும் ஊசி மருந்துகள், மருந்து வில்லைகள் 720 மற்றும் 20 லீற்றர் கசிப்பு என்பனவற்றை மறைத்து வைத்திருந்த நிலையில் சந்தேக நபர் ஒருவர் தருமபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் விசாரணைகளின் பின்னர் நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (நி-6-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகநூல் தரிசனம் 107

# கையூட்டு தவிர்!



அரசாங்க வேலையில் இருந்து ஓய்வு பெற்றவர் டயரில் எழுதிய குறிப்பு அரசாங்க வேலைகளின் பல துறையில் பணியாற்றி உள்ளேன். சம் பளத்தை விட இலஞ்சம், ஊழல், மோசடி நிறையவே பெற்று சந் தோஷமாக இருந்தேன்.

ஆண்டவன் தன்னை நல்லபடியாக பார்த்திருக்கிறான் என்று சந்தோஷமாக கோவிலுக்கு சென்று பூஜை புனஸ்காரம் செய்து வந்தேன். எனக்கு ஒரே ஒரு மகன். நல்லா மருத்துவர் ஆக படிக்க வைத்தேன்.

ஒரு நல்ல இடம் வாங்கி கார் பார்கிங், வீடு, கார், தோட்டம் என நாங்கள் சந்தோஷமாக இருந்தோம். நானும் ஓய்வு பெற்றேன். என் மகனுக்கு திருமணம் செய்து வைத்து கொழும்பில் ரூபாய் 2 கோடி பெறுமதியான தனி வீடு வாங்கி குடியேறினேன். மருமகளும் கர்ப்பமாக இருந்தாள்.

7 ஆம் மாதம் சீமந்தம் வைக்க ஏற்பாடு செஞ்சிகிட்டு இருந்தேன். அந்தவேளை தொலைபேசியில் ஒரு அழைப்பு. உங்கள் மகன் விபத்தில் காயமடைந்து அரச மருத்துவமனையில் உள்ளார் என் செய்தி வந்தது.

சில நாட்களின் பின் என் மகன் கோமா நிலைக்கு தள்ளப்பட்டான். என் மருமகளுக்கு ஆண் பிள்ளை பிறந்தது. ஆனால் என் மகன் இரண்டு மாதத்தில் உயிர் பிரிந்து இறந்துவிட்டான்.

இப்போது எனக்கு கிடைக்கும் அரச ஊதியத்தை வச்சுத்தான் காலம் போகுது. சாப்பாட்டுச் செலவுகள், வீட்டுக்கு வாடகை போக முட்டி வலி, சர்க்கரை போன்ற நோய்கள் பற்றிக்கொண்டதால் மருந்துச் செலவுகள் வேறு... அப்போது தான் யோசித்தேன், "ஏன் நம் வாழ்க்கை இப்படி ஆனது என்று..."

என் மனம் சொன்னது, "நீ வாங்கிய இலஞ்சம், ஊழல், மோசடி தான் உன் வாழ்வை சீரழித்தது..." என்று. "சரி... இலஞ்சம், ஊழல், மோசடி செய்யாமல் என்னுடன் சம காலத்தில் பணிபுரிந்த என் நண்பர் ஒரு வரை தொடர்பு கொண்ட போது "அவர் என் நிலை கண்டு மனம் சங்கடப்பட்டார்."

"சரிப்பா நீ எப்படி இருக்க..?" என கேட்டேன்.அவர் சொன்னார், "நிம்மதியாக இருக்கேன்.,.உண்ண உணவு, உடுக்க உடை, பேரன் பேர்த்தி, ஓய்வு பணத்தில் சிறியதாக ஒரு வீடு, பையன், பொண்ணு தனியார் கம்பெனி வேலை...நானும் என் மனைவியும் நிம்மதியாக இருக்கோம்.." என்று சொன்னார்.

என்னை யாரோ செருப்பால் அடித்தது போல் உணர்ந்தேன்.நானும் கோவிலுக்கு போனேன் விபூதி குங்குமம் வைத்தேன். அபிஷேகம் எல்லாம் செஞ்சேனே. எனக்கு மட்டும் ஏன் இப்படி..? நல்லா இருக்கும் போது உண்மையை உணரவில்லையே. உயிரற்ற பொருள் வாங்கி குவித்தேன். என் உயிர் உள்ள பொருளை இழந்தேன்.

இன்று...வாழ்க்கையை இழந்து நிற்கிறேன்.அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும். மக்களுக்கு செய்யும் சேவையே. மகேசனுக்கு செய்யும் சேவை. ஓய்வு பெற்ற ஓர் அரசு அதிகாரியின் ஒப்புதல் புலம்பல் இது.பிச்சை எடுதாவது படி.. படித்து வேலை யில் சேர்ந்த பிறகு பிச்சை எடுக்காதே...

# சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக இலங்கையை எச்சரித்த ஐ.நா

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

இலங்கையில் சிறுவர் பாது காப்பு தொடர்பாக ஐக்கிய நாடு கள் சபையின் சிறுவர் உரி மைகள் குழு சிவப்பு எச்சரிக் கையை வெளியிட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை உரையாற்றிய அவர் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் இந்நாட்டில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக தாம் மிகவும் அக்கறையுடன் செயற்பட வேண்டும் என்பதை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக சிறுவர் துஷ்பிரயோகம் உட்பட அனைத்து துஷ்பிரயோகங்களில் இருந்தும் இந்நாட்டு சிறுவர்களை பாதுகாத்து அவர்களுக்கு பாதுகாப்பான நாளைய எதிர்காலத்தை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் அனைத்து தரப்பினருடனும் இணைந்து செயற்பட வேண்டிய தேவையுள்ளது என அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதன் பிரகாரம், இதனை தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையாகக் கருதி, அரசாங்கத்திடமிருந்து குறிப்பிட்ட பதில்களையும் விளக்கங்களையும் எதிர்பார்ப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டுள்ளார். (நி)

# மக்கள் எழுச்சியை நசுக்கவே அரசு முனைப்புடன் செயற்படுகிறது

## அநுர குற்றச்சாட்டு



(கொழும்பு)


மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு பதில் தேடாமல் மக்கள் கொடுக்கும் அழுத்தங்களுக்கு எதிராக அடக்கு முறையை அரசாங்கம் அமுல் படுத்துவதாக அநுர திஸாநாயக்க குற்றம் சாட்டினார்.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்த பாராளுமன்ற விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே தேசிய மக்கள் சக்தியின் தலைவர், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அநுர திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் எழுச்சியை நசுக்க நடவடிக்கை எடுப்பதனாலேயே உலகில் இருந்து இலங்கை தனிமைப்படுத்தப்படுகின்றது. பொருளாதாரத்தின் உயர்வான காரணிகள் மீது மாத்திரமே இன்றைய கவனம் செலுத்தப் படுவதாகவும் இலங்கையின் புள்ளிவிபரங்கள் உண்மை நிலவரத்தை மறைக்கும் ஒன்று எனவும் தெரிவித்தார்.

இந்த புள்ளிவிபரங்கள் உண்மையான நிலைமையை பிரதிபலிக்கவில்லை எனவும் அரசாங்கத்திடம் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திட்டம் எதுவும் இல்லை எனவும் அவர் குற்றம் சாட்டினார். (நி)

# இலங்கைக்குப் படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள்



(கொழும்பு)

சிகிரியா, பொலநறுவை மற்றும் பண்டாரவளை போன்ற பகுதிகளுக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதன் மூலம் நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

ஸ்லோவாக்கியா, சுவீடன் மற்றும் நோர்வே ஆகிய நாடுகளில் இருந்து ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருவதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

# குரங்குக் காய்ச்சல் பரவலால் இலங்கைக்கு அபாயம்?

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

உலகின் ஏனைய நாடுகளில் பரவி வரும் குரங்குக் காய்ச்சல் தொற்றுக்குள்ளான நோயாளர்கள் பலர் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் அபாயம் உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குரங்குக் காய்ச்சல் தொடர்பான விசேட கலந்துரையாடலின்போது உரையாற்றிய சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவின் நிபுணர் மருத்துவர் சிந்தன பெரேரா, வெளிநாடுகளில் இருந்து அறிகுறியற்ற நோயாளர்கள் கூட இலங்கைக்கு வரமுடியும் எனவும் தெரிவித்தார்.

இது போன்ற நோயாளிகள் அதிகம் வரும் அபாயம் உள்ளதென்றும் இந்த நோய் உலகின் ஏனைய பகுதிகளில் இன்னும் இருப்பதால் ஒரு கட்டத்தில் அதிகமாக பரவும் என்றும் அவர் எச்சரித்தார்.

தற்போது அறிகுறியுடன் அடையாளம் காணப்பட்ட ஒருவர் சிகிச்சை பெற்று வரும் நிலையில் சில நேரங்களில் அறிகுறியற்ற நோயாளிகள் கூட இலங்கைக்கு வரலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை குரங்குக் காய்ச்சலை கட்டுப்படுத்துவதற்கு தடுப்பூசி போட வேண்டிய அவசியம் தற்போது இல்லை என சுகாதார அமைச்சின் பொது சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் மகேந்திர ஆனந்த தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்
பாகம் - 1
காவியத் தொடர் 23





அவர்களுடைய செக்கச் சிவந்த வெறி கொண்ட கண்கள் சங்கேதமாகப் பேசிக் கொண்டன.

சம்புவரையர் பூசாரியைப் பார்த்துத் தலையை அசைத்துச் சமிக்ஞை செய்தார். பூசாரி உடுக்கு அடிப்பதை நிறுத்தினான். வெறியாட்டம் ஆடிய தேவராளன் அடியற்ற மரம் போல் மேடை மீது விழுந்தான். தேவராட்டி ஓடி வந்து அவனைத் தூக்கி எடுத்துக் கொண்டு போனாள்.

"கேட்டால் கொடுப்பீர்களா?" என்றான் வெறியாடியவன்.

"கொடுப்போம் கட்டாயம் கொடுப்போம்! என்றான் பூசாரி.

"மன்னர் குலத்து இரத்தம் கேட்கிறாள்; ஆயிரங்கால அரசர் குலத்து இரத்தம் கேட்கிறாள்!" என்று வெறியாடியவன் கோர பயங்கரக் குரலில் கூவினான்.

மேடைக்கு முன்னால் வீற்றிருந்த பழுவேட்டரையர் சம்புவரையர், மழவரையர் முதலிய பிரமுகர்கள் ஒருவருடைய முகத்தை ஒருவர் நோக்கினார்கள்.

சபை மௌனமாகக் கலைந்தது; வெளியில் எங்கேயோ தூரத்தில் நரிகள் ஊளையிடும் சப்தம் கேட்டது.

இத்தனை நேரம் பார்த்துக் கேட்டவற்றினால் பரபரப்புக்குள்ளாகியிருந்த வந்தியத்தேவன், நரிகள் ஊளையிடும் சப்தம் வந்த திசையை நோக்கினான். அங்கே, அம்மாளிகையின் வெளிமதில் சுவரின் மீது ஒரு தலை தெரிந்தது. அது ஆழ்வார்க்கடியானுடைய தலைதான்!

ஒரு கணம் வந்தியத்தேவன் ஒரு பயங்கர உணர்ச்சிக்கு உள்ளானான். ஆழ்வார்க்கடியானுடைய தலையை வெட்டி அந்த மதில் மேல் வைத்திருந்தது போன்ற பிரமை உண்டாயிற்று. கண்ணிமைகளை மூடித் திறந்து பார்த்தபோது அந்தத் தலையை அங்கே காணவில்லை! அத்தகைய வீண் சித்தப்பிரமைக்குத் தான் உள்ளானது குறித்து வெட்கமடைந்தான். இதுவரை அனுபவித்து அறியாத வேறு பலவகை உணர்ச்சிகளும் அவன் உள்ளத்தைக் கலங்கச் செய்தன.

## அத்தியாயம் 6
## நடுநிசிக் கூட்டம்

குரவைக் கூத்துக்கும் வெறியாட்டுக்கும் பின்னர், வந்திருந்த விருந்தினருக்குப் பெருந்தர விருந்து நடைபெற்றது. வல்லவரையனுக்கு விருந்து ருசிக்கவில்லை. அவன் உடம்பு களைத்திருந்தது; உள்ளம் கலங்கியிருந்தது. ஆயினும் அவன் பக்கத்திலிருந்த அவனுடைய நண்பன் கந்தமாறன் அங்கிருந்த மற்ற விருந்தாளிகள் யார் யார் என்பதைப் பெருமிதத்துடன் எடுத்துக் கூறினான்.

பழுவேட்டரையரையும் சம்புவரையரையும் தவிர அங்கே மழபாடித் தென்னவன் மழவரையர் வந்திருந்தார்; குன்றத்தூர்ப் பெருநிலக்கிழார் வந்திருந்தார்; மும்முடிப் பல்லவரையர் வந்திருந்தார். தான்தொங்கிக் கலிங்கராயர், வணங்காமுடி முனையரையர், தேவ சேனாதிபதிப் பூவரையர், அஞ்சாத சிங்கமுத்தரையர், இரட்டைக் குடை ராஜாளியார், கொல்லி மலைப் பெருநில வேளார் முதலியோரை இன்னின்னார் என்று கந்தமாறன் தன் நண்பனுடைய காதோடு சொல்லிப் பிறர் அறியாதபடி சுட்டிக் காட்டித் தெரியப்படுத்தினான்.

இந்த பிரமுகர்கள் சாமானியப் பட்டவர்கள் அல்ல; எளிதாக ஒருங்கு சேர்த்துக் காணக்கூடியவர்களுமல்ல. அநேகமாக ஒவ்வொருவரும் குறுநில மன்னர்கள் அல்லது குறுநில மன்னருக்குரிய மரியாதையைத் தங்கள் வீரச் செயல்களினால் அடைந்தவர்கள். ராஜா அல்லது அரசர் என்பது மருவி அக்காலத்தில் அரையர் என்று வழங்கி வந்தது.

சிற்றரசர்களுக்கும் சிற்றரசர்களுக்குச் சமமான சிறப்பு வாய்ந்தவர்களுக்கும் அரையர் என்ற பட்டப் பெயர் சேர்த்து வழங்கப்பட்டது. அவரவர்களுடைய ஊரை மட்டும் கூறி அரையர் என்று சேர்த்துச் சொல்லும் மரபும் இருந்தது.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

# கீதா கல்யாணம்


(நேற்றைய தொடர்ச்சி)

கீதா உடனேயே கோவிந்தனுடன் குடித்தனம் செய்ய அவன் வீட்டிற்கு வந்து விட்டாள். அவள் வீட்டின் கொல்லைப் புறத்தில் காய்கறிச் செடிகளைப் பயிரிட்டாள். ஓர் ஓரத்தில் கொட்டகை போட்டு இரண்டு எருமைகளை விலைக்கு வாங்கி கட்டி பால் கறந்து விற்றுப் பணம் சம்பாதித்தாள். காய்கறிகளையும் விற்றதில் நிறையப் பணம் சேர்ந்தது. இதனால் மங்கம்மா வாங்கி இருந்த கடன்களெல்லாம் தீர்க்கப்பட்டன.

கீதா இப்படி பணம் சம்பாதித்தது கண்டு மங்கம்மா சந்தோஷப் பட்டாலும் அவள் கீதா எப்போது மந்திரத்தை உச்சரித்து தங்க நாணயங்களாகக் கொட்டச் செய்யப் போகிறாள் என்றே எதிர்பார்க்கலானாள்.

சில மாதங்களுக்குப் பின் பங்குனி உத்தரம் வந்தது. அன்று சோமுவும் நாராயணனும் அருளானந்தரோடு மங்கம்மாவின் வீட்டிற்கு வந்தார்கள். மங்கம்மா அருளானந்தரை மரியாதைகளுடன் வரவேற்கவே அவரும் "என்ன மங்கம்மா! உன் வீடு லக்ஷ்மிகரமாக விளங்குகிறதே. கீதாவின் முயற்சியா இது?" என்று கேட்டவாறே தன் பொய்த் தாடியையும் சடைகளையும் கழற்றி ஒரு பக்கமாக வைத்தார்.

மங்கம்மா திடுக்கிட்டு அவரைப் பார்த்து "ஆ... நீங்களா!" என்று அலறினாள். அவரும் "ஆம் உன் சின்ன மாமனாரான நான் தான் அருளானந்தர். கோவிந்தா! நான் உன் சின்ன தாத்தா. உன் அம்மா என் அண்ணனை அதாவது உன் தாத்தாவை அவரது மனைவியுடன் வீட்டை விட்டு துரத்தியவள்.



இவள் தன் மாமியாருக்கும் மாமனாருக்கும் இழைத்த கொடுமைகளை சொல்லி முடியாது. நான் வீட்டில் கோபித்துக் கொண்டு ஒரு நாடகக் குழுவில் சேர்ந்து விட்டேன். மருமகளால் துரத்தப்பட்ட உன் [illegible] [illegible] நான் தான் காப்பாற்றி வந்தேன். இதெல்லாம். இந்த சோமுவுக்கும் நாராயணனுக்கும் தெரியும். என்ன மங்கம்மா! நான் சொன்னதெல்லாம் உண்மைதானே?" என்று கேட்டார்.

மங்கம்மா தலைகுனிந்தவாறே நின்றாள். அப்போது அக்கிழவர் "இப்படி ஒரு நாடகத்தை கீதாவும் சோமுவும் நாராயணனும் நானுமாக நடித்தோம். மங்கம்மா நீ உன் மாமியாருக்கு என்னென்ன கொடுமைகள் செய்தாய் என்பதை கீதா அறிவாள். நீ நல்ல படியாக நடந்து கொண்டால் இந்த வீட்டில் இருக்கலாம். ஏதாவது சில விஷமம் செய்தால் கீதாவும் உன்னைப் போல மாறி உன்னை வீட்டை விட்டுத் துரத்தி விடுவாள். ஜாக்கிரதை" என்றார்.

மங்கம்மா சட்டெனத் தன் சின்ன மாமனார் கால்களில் விழுந்து "மாமா! என் தவறை உணர்ந்து விட்டேன். கீதா எனக்கு மருமகளாகக் கிடைத்தது என் அதிர்ஷடமே. அவள் என் வீட்டில் அடி எடுத்து வைத்த பிறகு வீட்டின் நிலையில் நல்ல மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அவள் லக்ஷ்மி கடாட்ஷப் பூஜை செய்யாமலேயே பணத்தைக் குவித்து வருகிறாள். அவளே சாட்சாத் லக்ஷ்மிதேவி தான்" என்றாள். அது கேட்டு அங்கிருந்த யாவரும் மங்கம்மா மாறியது கண்டு மிகவும் சந்தோஷப்பட்டார்கள்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிச்சலாக நேர்வழியில் வாழ்ந்தால் பிரச்சினைகளும் கவலைகளும் மட்டுமல்ல எதிரிகளும் அமைதியாகி விடுவார்கள்.

– நேருஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பேராசிரியர் பீரிஸை கைது செய்தால் என்ன?

கற்றவர்கள் கயவர்களாக இருந்தால் இந்த உலகம் தாங்காது என்றார் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.

கற்றவர்கள் எப்போதும் நல்லவர்களாக இருந்தால் மட்டுமே அவர்களால் இந்த உலகம் ஆக்கத்தையும் நன்மையையும் அனுபவிக்க முடியும் என்பது சத்தியமான உண்மை.

ஆனால் எங்கள் நாட்டில் கற்றறிந்த புத்திஜீவிகளில் ஒரு பகுதியினர் கபடத்தனம் உடையவர்களாக இருப்பதுதான் மிகப்பெரும் கேடு.

இதை நாம் கூறும்போது என்ன? இது என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

ஆம், கற்றறிந்த புத்திஜீவிகள் இன, மத, மொழி பேதமின்றி மனித உயர்வு பற்றிச் சிந்திக்க வேண்டும்.

தமக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை தக்கமுறையில் பயன்படுத்தி ஒட்டுமொத்த மனித சமூகமும் உயர்நிலையைப் பெறப்பாடுபட வேண்டும். அதுவே கற்ற கல்விக்குப் பயனாம்.

ஆனால் சிலர் தம் அறிவை அநீதிக்கும் இனவக்கிரத்துக்குமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

உண்மை, இலங்கைப் பாராளுமன்றத்தில் உறுப்பினராகவும் பொறுப்பு வாய்ந்த அமைச்சராகவும் இருந்த பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் எந்தத் தேர்தலிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றவரல்லர். நியமனத்தினூடாக பாராளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றவர்.

அவரை அரசியலுக்கு அழைத்து வந்தவர் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

அரசியல் துறையில் நிபுணத்துவம் கொண்ட பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அமைச்சராக இருப்பதனூடு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உதவியாக இருக்கும் என்பது சந்திரிகாவின் எதிர்பார்ப்பாக இருந்தது.

ஆனால் கால அசைவில் பதவி ஆசை கொண்ட பேராசிரியர் பீரிஸ் சந்திரிகாவை உதறித்தள்ளிவிட்டு, மகிந்த ராஜபக்ஷவுடன் சேர்ந்து அமைச்சுப் பதவியைப் பெற்றுக் கொண்டார்.

இங்குதான் ஒரு புத்திஜீவியின் கபடத்தனம் வெளிப்படுகிறது.

ஆம், அமைச்சுப் பதவிக்காக மகிந்த ராஜபக்ஷவுடன் சேர்ந்து தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்பட்ட ஜி.எல்.பீரிஸ், சிறுபான்மை இனம் என்பதற்காக தமிழ் மக்கள் பாதிக்கப்படக்கூடாது என எந்தச் சந்தர்ப்பத்திலும் நினைத்தாரில்லை.

ஆனால் இயற்கையின் தீர்ப்பு மகிந்த தரப்பில் இருந்து அவரை அன்னியப்படுத்தியது.

இப்போது அரசியலில் அநாதையாக்கப்பட்டுள்ள பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறுவது;

வரி விதிப்பை விடுத்து கொள்ளையடித்த பணத்தை மக்களுக்கு வழங்குங்கள் என்பதாகும்.

இங்கு பேராசிரியர் பீரிஸ் கூறுவது யாரை என்பது பட்டவர்த்தனமானது. அதிலும் அவர் அமைச்சராக இருந்தபோதுதான் இந்தக் கொள்ளையடிப்புகள் நடந்தது என்பதாலும் அப்போது அதனை அவர் மறைப்புச் செய்துள்ளார் என்பதாலும் அவரைக் கைது செய்து விசாரிக்க முடியும்.

அவ்வாறு செய்தால் கொள்ளையடிக்கப்பட்ட பொதுமக்களின் சொத்துத் தொடர்பான பல இரகசியங்கள் நிச்சயம் வெளிவரும்.

# பட்டதாரி நியமனங்களில் உள்ள குளறுபடிகளுக்கு தீர்வு வழங்க வேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

(கொழும்பு)

பட்டதாரி நியமனங்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்களுக்கு இந்த வார இறுதிக்குள் பதிலளிக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் தேசிய மக்கள் சக்தி கொண்டு வரும் பிரேரணை மீதான சபை ஒத்திவைப்பு விவாதம் நேற்றைய தினம் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் நான் பல விடயங்களை இந்த சபையில் முன்வைத்தேன். விசேடமாக பட்டதாரி நியமனங்களை வழங்கும் போது இழைக்கப்பட்ட அநீதி தொடர்பாக இந்த சபையில் சுட்டிக்காட்டினேன்.

ஜனாதிபதி தேர்தல் காலத்தில் சுமார் 7,500 நியமனங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அதேபோன்று முகாமைத்துவ உதவியாளர்கள் சேவைக்கு வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு சுமார் 1700 தொடர்பில் இந்த சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தேன்.

அரச பாடசாலைகளில் நீண்டகாலமாக பணியாற்றுகின்ற கல்விசாரா ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் இந்த சபையில் கேள்வி எழுப்பப்பட்டது.

எனினும் இந்த பிரச்சினைக்கு இதுவரை எவ்வித தீர்வும் வழங்கப்படவில்லை.

இந்த பிரச்சினைகளுக்கு இவ்வார இறுதிக்குள் பிரதமர் பதிலளிக்க வேண்டும் என தெரிவித்தார். (4-7)

# நாணய நிதியத்தின் தலையீட்டுடன் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு

## மகிந்தானந்த தெரிவிப்பு

அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில், சர்வதேச நாணய நிதியத்தின் தலையீட்டுடன் இந்தியா, சீனாவின் உடன்பாட்டுடன் பொருளாதார நெருக்கடியை சீர்செய்துகொள்ள முடியும் என்ற நம்பிக்கை இருப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார சிக்கலானது, இந்த நாட்டில் வாழுகின்ற சகல தரப்பினரையும் பாதித்துள்ள விடயம் என்பதை நாமும் ஏற்றுக்கொள்கின்றோம்.

இது தொடர்பில் விவாதிப்பதற்கு ஒன்றும் இல்லை. இலங்கை அரசியல் வரலாற்றில் முதன்முறையாக பாரிய பொருளாதார நெருக்கடிக்கு நாம் தற்போது முகங்கொடுத்துள்ளோம்.

இது யுத்தத்தினாலோ அல்லது முரண்பாடுகளாலோ ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி அல்லது. அதற்கும் அப்பால் சென்ற அரசியல் தீர்மானங்களால் ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடிக்கே நாம் தற்போது முகங்கொடுத்துள்ளோம்.

இது எமது நாட்டவர்கள் மட்டும் முகம்கொடுக்கும் பொருளாதார நெருக்கடி அல்ல. உலக பொருளாதார நெருக்கடியாகும். உலக பொருளாதார நெருக்கடிக்கு சகல நாடுகளும் முகங்கொடுத்துள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4-7)

# பாடசாலை மாணவர்கள் மீது தாக்குதல்

## 3 பொலிஸார், அதிபர், ஆசிரியர் கைது

(கொழும்பு)

ஹொரணை - மில்லனிய பிரதேசத்தில் அமைந்துள்ள பாடசாலையொன்றில், வகுப்பாசிரியரின் பணத்தை களவாடியதாகத் தெரிவித்து மாணவர்கள் இருவர் தாக்கப்பட்டமை தொடர்பில், மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹொரணை - மில்லனிய பிரதேசத்திலுள்ள பாடசாலையொன்றில் ஆசிரியர் ஒருவரின் பணத்தை களவாடியதாக சந்தேகித்து 5 ஆம் ஆண்டு மாணவர்கள் சிலர் மீது தாக்குதல் மேற்கொண்டமை தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்நிலையிலேயே மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்களும், பாடசாலை அதிபர் மற்றும் ஆசிரியர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். (4-7)

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2022**

"எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்"

*- லியூசி லார்கோம் (அமெரிக்கக் கவிஞர்)*

# மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி மேற்கு-தம்பளாவத்தை அளவை சிதம்பரேஸ்வரர் தேவஸ்தான புனராவர்த்த மஹாகும்பாபிஷேக விஞ்ஞாபனம் -2022 எண்ணெய்க்காப்பு நிகழ்வு நாளை வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை இடம்பெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.47 மணி தொடக்கம் 9.59 வரையுள்ள சுபவேளையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது என ஆலய பரிபால சபையினர் அறிவித்துள்ளனர். (நி-6)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** வல்லான், ஆலடி சந்தி, இறுப்பிட்டி, கேரைதீவு, குறிகட்டுவான், மடத்துவெளி, நடுவுக்குறிச்சி, புங்குடுதீவு, அரசடி சந்தி, ஐஸ் தொழிற்சாலை- பொலிகண்டி, இலந்தைக்காடு, கணபதி ஆலை, கொற்றாவத்தை, நெடிய [illegible] இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** கருணாட்டுக்கேணி சந்தி, கொக்கிளாய் மருத்துவமனை, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் வடக்கு (15 ஆவது மைல் கல்லடி), பரராஜசிங்கம் தோட்டம், புளியமனை சந்தி, 18 ஆவதுவிஜ.ஆர்இராணுவ முகாம்-தேவிபுரம், 68 ஆம் பிரிவு இராணுவ முகாம்-இரணைப்பாலை, 68ஆவது பிரிவு-டய லொக் கோபுரம் -இரணைப்பாலை, தேவிபுரம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஆசிக்[illegible] ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** சி.இ.சி.பி (சிலாவத்துறை), சிலாவத்துறை கடற்படை முகாம், செம்மண்தீவு நீர் வழங்கல் சபை, நீர் வழங்கல்- முருங்கன், லைவ் ஸ்டாக் ப்ரீடர்ஸ் கோப் சொசைட்டி- செம்மண்தீவு, அகத்தி முறிப்பு, அகத்தி முறிப்பு திட்டம், அளவக்கை சிறுகுளம் திட்டம், அரிப்பு, அரிப்பு நீர் வழங்கல், ஆத்திமோட்டை, ஆத்திக்குழி, செம்மண்தீவு, இலந்தைமோட்டை, ஹனைஸ் நகர், கரடிக்குழி, காயக்குழித் திட்டம், கொக்குப்படையான், கொண்டச்சி திட்டம், கொண்டச்சி நீர் வழங்கல் சபை, கொண்டச்சி சிங்கள கிராமம், கூழாங்குளம், கூழாங்குளம் திட்டம் (ஜீநாத் நகர்), மடுக்கரை, மணல் குளம், மணற்குளம், மறுச்சுக்கட்டி, மருதமடு மாதோட்டம், மேதன்வெளி, முள்ளிக்குளம், முருங்கன், முசலி தேசிய பாடசாலையடி, பெரிய பொள்ளாச்சி பொற்கேணி, பாலைக்குழி, பாலைக்குழி திட்டம், பரப்பாங்கண்டல், பரிகாரிக் கண்டல், பெரிய பொள்ளாச்சி பொற்கேணி (பண்டாரவெளி), பிச்சைக்குளம், பிச்சைவாணிபங்குளம் திட்டம், பொன்தீவு கண்டல் கள்ளிமோட்டை புளியங்குளம், பொன்னாச்சி குளம், புதுக்காமம் கிராமம், புதுக்குடியிருப்பு (சிலாவத்துறை), புதுவெளி, சின்ன பொள்ளாச்சி பொற்கேணி திட்டம், சிலாவத்துறை, சூரிய கட்டைக்காடு, சின்ன பொள்ளாச்சி பொற்கேணி, தம்பட்ட முசலி, உயிர்தரசங்குளம், வெள்ளிமலை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 118

காலிபர் ஏவுகணை (Kalibr missiles)



### பூக்களின் பெயர் கொண்ட பீரங்கிகள்

தரைவழித் தாக்குதல்களை நடத்த ரஷ்யா நம்பியிருந்தது அதன் அதிநவீன பீரங்கிகளைத் தான். பியோனி, ஹியாசிந்த், அகாசியா எனப் பூக்களின் பெயர் கொண்ட பீரங்கிகளை வைத்து ஆக்ரோஷமான தாக்குதல்களை நிகழ்த்தி வருகின்றன ரஷ்யப் படைகள்.

### கிளஸ்டர் வெடிகுண்டுகள்

அதிக உயிர்ச்சேதம் ஏற்படுத்தும் கிளஸ்டர் வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட குண்டுகளை ரஷ்யா பயன்படுத்துவதாகக் குற்றம் சாட்டியது உக்ரைன். இந்த கிளஸ்டர் வெடிகுண்டுகள் இலக்கை நெருங்கும்போது சிறு சிறு குண்டுகளாகப் பிரிந்து ஒரே நேரத்தில் வெடித்துச் சிதறி பல இலக்குகளைச் சேதப்படுத்தும். இதனால் அதிக அளவில் உயிர்ப்பலி ஏற்படும்.

### இஸ்கந்தர் ஏவுகணை

முக்கிய இலக்குகளைத் தாக்க இஸ்கந்தர் ஏவுகணைகளைப் பயன்படுத்தியிருக்கிறது ரஷ்யா. 500 கி.மீ தூரம் வரை பயணித்து இலக்குகளைத் தாக்கக்கூடிய சக்தி பெற்றது இஸ்கந்தர் ஏவுகணை. இந்த வகை ஏவுகணைகளில் பெரும்பாலானவற்றை ரஷ்யாவின் ஆதரவு நாடும் உக்ரைனின் அண்டை நாடுமான பெலாரஸிலிருந்து ஏவித் தாக்குதல் நடத்தியிருக்கிறது ரஷ்ய இராணுவம்.

### தெர்மோபாரிக் ஆயுதங்கள்

வளிமண்டலத்தைச் சூடாக்கி அங்குள்ள காற்றின் வெப்பநிலையை அதிகரித்துத் தாக்குதல் நடத்தும் திறன் கொண்டவை இந்த தெர்மோபாரிக் ஆயுதங்கள். காற்றின் கொதிநிலை அதிகரிப்பதால் தெர்மோபாரிக் ஆயுதத்தின் இலக்குக்குக் கீழிருக்கும் அனைத்தும் எரிந்து விடுமாம். பதுங்குகுழிகள், சுரங்கங்களைக் கூடச் சேதப்படுத்தி விடுமாம் இந்த தெர்மோபாரிக் ரக ஆயுதங்கள்.

### போர் தொடர்கிறது...

இக்கட்டுரையை முடிக்கும்போது போர் 80 நாட்களைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது. உக்ரைனில் ரஷ்யப் படைகள் நிலைகொண்டிருக்கும் பகுதியைப் படம் காட்டுகிறது. ரஷ்யா மற்றும் உக்ரைன் நட்புறவைக் குறிக்கும் வகையில் உக்ரைனின் தலைநகரான கியேவில் இருந்த சோவியத் காலத்து நினைவுச்சின்னம் அகற்றப்பட்டுவிட்டது.

ரெயின்ஸ் ரெயின்போ நினைவுச்சின்னம் மக்கள் நட்பு வளைவு என்றும் அழைக்கப்படுகிறது. இது சோவியத் ஒன்றியத்தின் 60 ஆவது ஆண்டு நினைவாக 1982 இல் கட்டப்பட்டது. இதன் அருகில் உக்ரைனிய மற்றும் ரஷ்யத் தொழிலாளி ஒருவர் பீடத்தில் ஒன்றாக நிற்கும் 27 அடி சிலை அமைக்கப்பட்டது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் இந்த நினைவுச் சின்னம் அகற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ரஷ்யா மற்றும் உக்ரைன் நட்புறவைக் குறிக்கும் சோவியத் காலத்து நினைவுச்சின்னம்.






(முற்றும்)

# எதிர்வரும் மார்ச் 20 ஆம் திகதிக்கு முன் தேர்தல் திகதியை அறிவிக்க முடியும்

## தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர்



(கொழும்பு)

வாக்காளர் பெயர் பட்டியலை இறுதிப்படுத்தும் பணிகள் இம்மாத இறுதிக்குள் நிறைவடையும். அதன் பின்னர் அரசியலமைப்பு சார் தடைகள் ஏற்படுத்தப்படாவிட்டால், 2023 மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான தினத்தை அறிவிக்க முடியும் என்று சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுட்காலம் 4 ஆண்டுகள் என்று உள்ளூராட்சி மன்ற கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதே வேளை இந்த ஆயுட்காலத்தை குறைப்பதற்கு அல்லது நீடிப்பதற்கான அதிகாரம், விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்கு காணப்படுவதாகவும் குறித்த சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஆயுட் காலத்தை குறைப்பதனாலும் நீடிப்பதனாலும் அதற்கான அதிகபட்ச காலம் ஒரு வருடம் மாத்திரமேயாகும்.

தேர்தலொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்வதற்கு எமக்கு சுமார் இரண்டு மாதங்கள் போதுமானவை.

உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை கடந்த ஆண்டு டிசெம்பரில் ஆரம்பிப்பதற்கு நாம் தீர்மானித்திருந்தோம். இது தொடர்பில் ஊடக அறிவித்தலையும் வெளியிட்டோம்.

எனவே இம்மாத இறுதியில் இந்த வாக்காளர் பெயர் பட்டியலை இறுதிப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். அதற்கமைய அதன் பின்னர் மார்ச் 20 ஆம் திகதிக்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கான தினத்தை அறிவிப்பதற்கான அரசியலமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள பொறுப்பினை நிறைவேற்றுவதே ஆணைக்குழுவின் இலக்காகும். அரசியலமைப்பு சார் தடைகள் ஏற்படுத்தப்படாவிட்டால் இதனை எம்மால் நிறைவேற்ற முடியும் என அவர் தெரிவித்தார். (நி)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 500 | 450 | 450 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 220 | 220 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 250 | 200 |
| தக்காளி | 450 | 350 | 450 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 150 | 150 | 160 |
| கோவா | 350 | 300 | 350 | 320 |
| கரட் | 350 | 400 | 400 | 450 |
| பூசணி | 140 | 160 | 150 | 160 |
| புடோல் | 250 | 300 | 160 | 280 |
| வாழைக்காய் | 160 | 160 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 500 | 600 |
| பெரிய வெங்காயம் | 300 | 270 | 280 | 380 |
| பாகற்காய் | 500 | 500 | 600 | 450 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 140 | 250 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 120 | 160 |
| பயற்றங்காய் | 300 | 400 | 350 | 400 |
| லீக்ஸ் | 280 | 350 | 300 | 350 |
| பீற்றூட் | 160 | 200 | 250 | 260 |
| கறிமிளகாய் | 600 | 650 | 800 | 700 |
| முருங்கைக்காய் | 450 | 400 | 350 | 600 |
| போஞ்சி | 350 | 400 | 400 | 400 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | 450 | 420 |
| கீரை - 1 பிடி | 100 | 140 | 150 | 150 |
| தேசிக்காய் | 400 | 400 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 85 | 85 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 200 | 350 | 250 |
| வெங்காயப்பூ | 550 | 400 | 400 | -- |
| முள்ளங்கி | 120 | 140 | 150 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | 140 | 80 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்...

அம்பாறை - திருக்கோவில் பகுதி பாடசாலையொன்றில் இரண்டு மாணவர்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

13 வயதான மாணவர் சம்பவத்தில் உயிரிழந்தவர் என்றும் அவரது உடல் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மற்றைய மாணவர் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் திருக்கோவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-7)

## குடும்பஸ்தர்...

ரணையில் தெரியவந்துள்ளது.

கொலை செய்யப்பட்ட பின்னர் புதுமுறிப்பு குளத்தின் கீழ் உள்ள நீர்ப்பாசன வாய்க்காலில் சடலத்தை வீசியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கிளிநொச்சி நீதவான் நீதிமன்றின் நீதிபதி பார்வையிட்ட பின்னர் சடலம் மீட்கப்பட்டு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-7,316)

## போதைப் பாவ...

மகனை ஒப்படைத்துள்ளார் தாயாரின் வேண்டுகோளுக்கு இணங்க இளைஞனை கிளிநொச்சிமாவட்ட நீதிமன்றில் முற்படுத்தி நீதிமன்ற உத்தரவுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ள இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (4-7,316)

## 80 கிலோ...

நிலையில் 80 கிலோவிற்கும் மேற்பட்ட எடையுடைய கேரளக் கஞ்சா நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

இராணுவ புலனாய்வு பிரிவினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் ஆகியோரின் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது குறித்த கஞ்சா மூடைகள் மீட்கப்பட்டுள்ளன.

பூம்புகார் கடற்கரையோரத்தில் இருந்து குறித்த கஞ்சா மூடைகள் மீட்கப்பட்டுள்ளன. இருப்பினும் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை.

மீட்கப்பட்ட கஞ்சா தொடர்பில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் யாழ். நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளனர். (4-7,104)

## பொருட்களை...

பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று கருத்து வெளியிட்ட அவர், பண்டிகைக் காலம் நெருங்கி வருவதால் அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடி மக்களுக்குத் தேவையான பொருட்களை வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை தயாரித்துள்ளதாக வர்த்தக அமைச்சர் குறிப்பிட்டார்.

மக்களின் நலன் கருதி முட்டைக்கான கட்டுப்பாட்டு விலை பேணப்பட்டு வருவதாகவும், கோதுமை மாவின் விலையை அடுத்த சில மாதங்களில் தொடர்ந்தும் பேண வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருப்பதாகவும் வர்த்தக அமைச்சர் குறிப்பிட்டார். (4-7)

## போதைப்...

பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய வல்வெட்டித்துறை மற்றும் நெல்லியடி பகுதிகளைச் சேர்ந்த 25 மற்றும் 30 வயதுக்குட்பட்ட நால்வரே கைது செய்யப்பட்டனர். (4-7)

## பச்சிளம் குழந்...

ஊர்காவற்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கரம்பன் பகுதியில் வசித்து வந்த வாய் பேச முடியாத பெண் ஒருவரை அதே பகுதியைச் சேர்ந்த ஆண் ஒருவர், கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் திருமணம் செய்துள்ளார்.

திருமணம் செய்து ஒரு வருடத்தின் பின்னர் அந்த பெண்ணினை விட்டுவிட்டு சென்றுள்ள நிலையில் கடந்த மூன்று ஆண்டுகளாக இருவருக்கும் இடையே தொடர்புகள் எவையும் இருந்ததில்லை. அவர்களுக்கு 3 வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளது.

இந்நிலையில் கடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் வந்த தந்தை, சேர்ந்து வாழ்வோம் எனக்கூறி, தாயையும், மகளையும் சுருவில் பகுதிக்கு அழைத்துச் சென்று 5 நாட்களாக அப்பகுதியில் வசித்து வந்துள்ளார்.

பின்னர் அவர், கடந்த 4ம் திகதி, வாய் பேச முடியாதவர்களது சமூக ஊடக குழுமம் (வாட்ஸப்) ஒன்றில் தனது மகளை தாக்கும் காணொளியை வெளியிட்டிருந்தார். அத்துடன் தனது மனைவியும், குறித்த குழந்தையின் தாயுமான பெண்ணின் மரண அறிவித்தல் போஸ்டர் ஒன்றினையும் பகிர்ந்துள்ளார்.

இந்த காணொளியும், மரண அறிவித்தல் போஸ்டரும் சமூக ஊடகங்களில் பரவ ஆரம்பித்த நிலையில் அது ஊர்காவற்துறை பொது சுகாதார வைத்திய அதிகாரியின் கண்களில் எட்டியது.

இதனையடுத்து விரைந்து செயற்பட்ட பொது சுகாதார வைத்திய அதிகாரி, குறித்த காணொளியையும், மரண அறிவித்தல் போஸ்டரையும் ஊர்காவற்துறை நீதவானுக்கும் ஊர்காவற்துறை பொலிஸாருக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இதனையடுத்து குறித்த சந்தேகநபரை கைது செய்யுமாறு ஊர்காவற்துறை பொலிஸாருக்கு, ஊர்காவற்துறை நீதிவான் உத்தரவிட்டார். (4-7,104)

## இந்து கற்கை...

வருட காலத்துக்குச் செயற்படும் வகையில் பீடாதிபதியாக இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (4-7,33,104)

## இலங்கையை...

நடைபெற்ற சந்திப்பில் உறுதியளித்துள்ளார். (4-7)

## பிரச்சினைக்கு...

தீர்வு காணும் நோக்கில் வடக்கு மாகாணத்தில் விசேட நடமாடும் சேவையை முன்னெடுத்தோம்.

பலவேறு காரணிகளால் இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு புலம்பெயர்ந்த 11,782 இலங்கையர்கள் மீண்டும் தமது சொந்த நாட்டிற்கு வருகைதந்துள்ளார்கள். இவர்கள் முக்கிய ஆவணங்கள் இல்லாமல் பல அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளார்கள்.

ஒருசிலருக்கு பிறப்பு அத்தாட்சி பத்திரம், தேசிய அடையாள அட்டை உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் ஏதும் கிடையாது. இந்த அடிப்படை பிரச்சினைக்கு தீர்வுகாண 12 அமைச்சுக்களை ஒன்றிணைத்து விசேட செயற்திட்ட நடவடிக்கை நீதியமைச்சர், செயலாளர் ஊடாக முன்னெடுக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனோர் அலுவலகம் கடந்த நான்கு வருடத்தில் 65 விசாரணை கோவைகளை மாத்திரம் நிறைவு செய்தது. ஆட்சிமாற்றத்தின் பின்னர் விசாரணை கோவை முழுமைப்படுத்தல் 2000 ஆக நிறைவு செய்யப்பட்டது.

காணாமல் போனோரது உறவுகளுக்கு வழங்கப்படும் 1 இலட்சம் ரூபா நட்டஈட்டை 2 இலட்சமாக அதிகரிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. வடக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு முரண்பாடற்ற வகையில் வெளிப்படைத் தன்மையுடன் தீர்வுகாண அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியது அவசியமாகும்.

கிளிநொச்சி மாவட்ட செயலாளர் பிரிவில் இடம்பெற்ற நடமாடும் சேவையின் போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் உட்பட ஒருசிலர் உண்மை நோக்கத்திற்கு தடையேற்படுத்தும் வகையில் போராட்டத்தில் ஈடுபட்டார்கள். தடைகளை பொருட்படுத்தாமல் நடமாடும் சேவையை சிறந்த முறையில் முன்னெடுத்தோம்.

பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்கினேஸ்வரன் நடமாடும் சேவைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கினார். அவருக்கு நன்றியை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் உண்மை நோக்கத்துடன் பிரச்சினைக்கு தீர்வுகாண அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

வடக்கு மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண பொறுப்புடன் செயற்படும் போது ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அதற்கு தடையேற்படுத்தும் வகையில் செயற்பட்டமை வெறுக்கத்தக்கது. வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண பொறுப்புடனும், அர்ப்பணிப்புடனும் செயற்படுவது அவசியமாகும் என குறிப்பிட்டார். (4-7)

### மஹஜன சம்பத

திகதி 2022/11/08
சீட்டிழுப்பு இலக்கம் 4933
A 5 3 3 1 0 7

### ஹந்தஹன (HANDAHANA)

சீட்டிழுப்பு திகதி 2022.11.08
சீட்டிழுப்பு இலக்கம் 242
கடகம் 01 10 19 57 கடகம்

### மெகா பவர்

திகதி 08/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1281
D 23 07 22 55 66

### கொவிசெத

திகதி 2022.11.08
சீட்டிழுப்பு இலக்கம் 3175
M 01 33 44 49

### தன நிதானய

திகதி - 2022.11.08
சீட்டிழுப்பு இலக்கம் - 963
V 45 63 66 80

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 08/11/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1388
மிதுனம் 9 5 8 1 9 4

### அத கோடிபதி (ADA KOTIPATHI)

செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1734
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.11.08
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,076,720/-
வெற்றி இலக்கங்கள் 19 25 60 66 M

### சனிதா (Shanida)

செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.11.08
சீட்டிழுப்பு இல : 4069
வர்ணம் : இள நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,720,140/-
வெற்றி இலக்கங்கள் 06 16 28 36 A

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 3,907,731.80
திகதி 2022-11-08
வெற்றி வாரம் 3620
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 37 40 45 54 மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,796,260/-

### லக்ன வாசனா

சீட்டிழுப்பு வாரம் 1084
வர்ணம் இளஞ்சிவப்பு
திகதி 2022.11.08 செவ்வாய்க்கிழமை
F 10 14 62 64 76
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 275,655,665.80

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1908
நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.11.08
தினம் செவ்வாய்க்கிழமை
G 17 33 37 59
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,331,420/-

### சசிரி

சீட்டிழுப்பு வாரம் 246
சீட்டிழுப்பு திகதி 2022.11.08
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 13 23 25
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,175,400/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 306...

வியட்நாம் கடற்பரப்பில் மீட்கப்பட்டுள்ள 306 இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவர வியட்நாம் அதிகாரிகளுடன் இராஜதந்திர தொடர்புகளை ஆரம்பித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கடலில் மூழ்கும் நிலையில் இருந்த படகொன்றில் இருந்து புலம்பெயர்ந்தோர் என சந்தேகிக்கப்படும் சுமார் 306 பேர் சிங்கப்பூர் கடற்படையினரால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டனர்.

படகில் இருந்தவர்கள் மீட்கப்பட்டு வியட்நாம் நோக்கி அழைத்துச் செல்லப்படுவதாக சிங்கப்பூர் அதிகாரிகள் இலங்கைக்கு அறிவித்துள்ளதாக கடற்படைப் பேச்சாளர் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-7)

# இலங்கையில் மோசமான உணவு நெருக்கடி

## ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் மோசமான உணவு நெருக்கடி குறித்தும் ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

அவசர மனிதாபிமான உதவி தேவைப்படும் மக்களின் எண்ணிக்கை இருமடங்காக அதிகரித்துள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் உள்ள 22 மில்லியன் சனத்தொகையில் 1.7 மில்லியன் மக்களுக்கு உதவி தேவைப்படுவதாக ஜூன் மாதம் ஐ.நா முகவரகங்கள் மதிப்பிட்டிருந்த போதும், தற்போது அந்த எண்ணிக்கை 3.4 மில்லியனாக அதிகரித்துள்ளதாக கொழும்பிலுள்ள ஐ.நா முகவரங்கள், நேற்று வெளியிட்ட கூட்டறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (4-7)


### உடனடி வேலை வாய்ப்பு

எமது WEC நிறுவனமானது இளைஞர் ய்வதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கி வருவது அனைவரும் அறிந்த விடயம். அந்த வகையில் அலுவலக வேலை தேடும் இளைஞர் யுவதிகள் எம் நிறுவனத்தில் இணைந்து கொள்ள முடியும்.

நாங்கள் உங்களிடம் எதிர்பார்க்கும் தகைமைகள் தரம் 10 தொடக்கம் O/L மற்றும் A/L படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

எங்கள் மூலம் அமைத்து தரப்படும் வசதிகள்

- தங்குமிட வசதி, வைத்திய செலவுகள் முற்றிலும் இலவசம்.
- பயிற்சியுடன் பதவி உயர்வு.
- பயிற்சியின் போது 18500 - 35000 வரை பெற முடியும்.
- பயிற்சியின் பின் 75000 - 100000 வரை பெற முடியும்.

எனவே நீங்கள் எங்களுடன் இணைந்து கொள்ள விரும்பினால் உடன் தொடர்பு கொள்ளவும். 077 062 1631, 077 969 1759

(13395)

### ஓடு விற்பனைக்கு

நூராணி ஓடு, முகட்டு ஓடு, சின்ன ஓடுகள் குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.

077 826 7697
077 836 2408

(13391)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

### ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13352) 076 825 7716 (ஆகாஸ்)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

### றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623

(13392)

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு - ஜெயம்

077 814 7389, 077 986 5457

(13393)

### SAM LANKA

DIRECT IMPORTERS & DISTRIBUTORS

NO:- 367 NAVALAR RAOD, ILLUPPAIYADY JUNCTION, JAFFNA

021 222 1002, 0094 777 46 58 48, 0094 778 20 94 24

SAM LANKA 25% OFF VALID TILL 30th NOVEMBER 2022

KEVILTON Power to Innovate — SWITCHES, ISOLATOR, RCCB, BREAKERS, LED LIGHTS, LED PANEL LIGHTS

ORANGE ELECTRIC — SWITCHES, ISOLATOR, RCCB, BREAKERS, LED LIGHTS, LED PANEL LIGHTS


Wireman — ALL KINDS OF LED LIGHTS

Panasonic — ALL KINDS OF LED LIGHTS

AKRA — ALL KINDS OF LED LIGHTS

(13397)


## 5ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 26.08.1940

மறைவு 09.11.2017

### அமரர் சங்கரப்பிள்ளை அரியராசா

(இணுவில் மத்திய கல்வி அபிவிருத்தி நிதியத்தின் முன்னாள் செயலாளர்)

நல்ல சகோதரனாய் நல்ல கணவனாய் நல்ல தந்தையாய்
நல்ல மாமாவாய் நல்ல வழிகாட்டியாய்
நல்ல சமூக பணியாளனாய் வாழ்ந்து காட்டியவரை
காலன் பொறுக்காது நித்திரையில் தன்னோடு அழைத்துவிட்டான்.
ஆண்டுகள் ஐந்து சென்றாலும் எம்மைவிட்டு அவர் செல்லாமல்
வாழ்ந்து கொண்டே இருப்பார்

இணுவில் மேற்கு,
இணுவில்.

(13396) குடும்பத்தினர், உறவினர்கள்


### பங்குச்சந்தை முதலீட்டாளர் கருத்துக்களம் - யாழ்ப்பாணம்

எதிர்வரும் நவம்பர் 12ஆம் திகதி (சனிக்கிழமை) மு.ப 9.30 மணி முதல் 11.30 வரை

Tilko Jaffna City Hotel இல்

அனுமதி இலவசம்

உங்களுக்கு பொருத்தமான முதலீட்டு வழிமுறை சம்பந்தமாக அறிந்து கொள்ள எங்களுடன் இணையுங்கள்

முன்பதிவுகளுக்கு : 777 105 205 / 021 222 1455

CSE கொழும்பு பங்குப்பரிவர்த்தனை

(13335)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.11.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.